1059

தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 4 | சென்னை 7-6-58 | சனிக்கிழமை | இதழ் 47

18 JUN 1958
MADRAS
198385
சென்னை-600 008

கதையும், வசனமும்!

சென்னை அமைச்சரவையில்

ஆந்திர நாட்டைச் சேர்ந்த கோபால ரெட்டியார் முன்பு நிதியமைச்சராகப்பணிபுரிந்தார். அப்போதெல்லாம் அவரைப்பற்றி எழுதும் தேசியப் பத்திரிகைகள், 'அமைச்சரவையில் கோபால ரெட்டியார் தான் வயதில் இளையவர், வசிகரமான தோற்றமுடையவர்' என்று குறிப்பிடத் தவறுவதில்லை. அதுதான் உண்மையும்கூட. வெள்ளையர் பாணியில் வேளா வேளைக்கு வித விதமான ஆடைகள் உடுத்திக்கொண்டு பகட்டாக இருப்பதிலே கோபால ரெட்டியார் வெகு சமர்த்தர். அவர் சென்னை மாநிலத்திற்கு நிதி அமைச்சராக இருந்தார். அவர், தனக்குத் தரப்பட்டிருந்த நிதியிலாகாவைக் கவனித்திருந்தாலும், தவறியிருந்தாலும், இலாகா ஒதுக்கப்படாத கலைத்துறைக்கு அவர் அமைச்ச போலவே இருந்தார். ஆட்டக் கச்சேரியானாலும் சரி, பாட்டுக் கச்சேரியானாலும்சரி, புரவி நாட்டியமானாலும் சரி, பொழுது போக்கு நாடகமானாலும் சரி அந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் நிதியமைச்சர் கோபால ரெட்டியார் தலைவர் அல்லது துவக்குபவர்! அவர் பதவியிலிருந்த காலத்தில் இதுபோன்ற கலை நிகழ்ச்சிகளை தவறவிட்டதில்லை. கட்சி சம்பந்தப்பட்ட கமிட்டிக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள்-ஆகியவற்றைப்போல் பதின்மடங்கு கலை நிகழ்ச்சிகளில்தான் அவர் கலந்துகொண்டிருந்திருக்கிறார். ஆனால் கலைத்துறை குறித்து அவரது கருத்தென்ன என்பது பற்றி அவர் எங்கேயும் வெளிப்படையாகச் சொன்னதில்லை. [illegible] பேசாவிட்டாலும் கலைத்துறையைப் பற்றியோ எழுத்தாளர்களைப் பற்றியோ குறைத்துப் பேசியதில்லை. அவருக்குப் பிறகு நிதியமைச்சராக வந்தவர் 'நமது' சுப்ரமணியம். கோபால ரெட்டியாரைப் போலவே இவரும் நாட்டியத்திற்குத் தலைமை வகிக்கிறார். நாடகத்தைத் துவக்கி வைக்கிறார். இன்னும் சொன்னால் கோபால ரெட்டியாரைக் காட்டிலும் சுப்ரமணியம்தான் கலை நிகழ்ச்சிகளில் அதிகம் பங்கேற்று வருகிறார். ஆனால், கோபால ரெட்டியார், பாராட்டுவது ஒரு சம்பிரதாயம் என்று எண்ணி எல்லோரையும் புகழ்ந்தே தீர்த்தார். நமது சுப்ரமணியம், எல்லாக் கலைகளிலும் தான் ஒரு வல்லவரைப்போல பேசி வருகிறார். எந்தக் கலை விழாவில் அவர் பங்கேற்றாலும், யாரையாவது திட்டாமல், குறைத்துப் பேசாமல் சொற்பொழிவை முடிக்க அவருக்கு மனம் வராது. ஆச்சாரியாரின் இந்தக் குணம் இவரை நன்றாக அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

தி. மு. கழகம் சட்ட மன்றத்துக்கு வந்த பிறகு, நிதியமைச்சர் சுப்ரமணியம் திரைப்படங்களை கேவலமாகப் பேசுவதையும், கதை, வசனம் எழுதுவது கடினமான காரியமல்ல என்று இழித்துரைப்பதையும் பழக்கமாகக் கொண்டிருப்பதை பொதுமக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். நிதியமைச்சர் சுப்ரமணியம் கருதுவதைப்போல் கதை, வசனம் எழுதுவது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல; கோடிக் கணக்கான மக்கள் வாழும் தென்னாட்டில் நூற்றுக்கணக்கான பேர் கதை, வசனம் எழுதுகிறார்கள், அவர்களில் எத்தனை பேரை மக்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள் என்பதை ஒரு சணம் ஆராய்ந்தால், கதை வசனம் எழுதுவதிலும் ஏதோ 'சூட்சமம்' இருக்கத்தான் செய்கிறது என்பதை எவரும் உணர முடியும். கதை, வசனம் எழுதுபவர்கள் அரசியலுக்கு வந்துவிட்டதாக அவர் கணக்குப் போடுவது தவறு. ஒருவேளை தி. மு. க.வைச் சேர்ந்தவர்கள் கலைத்துறையையும் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நிதியமைச்சர் ஒப்புக்கொண்டால், 'அரசியல் துறையிலே மட்டுமல்லாமல் கலைத்துறையிலும், இலக்கியத் துறையிலும் தி. மு. கழகத்தினர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருக்கின்றனர் என்ற மெய்யுரையைத் தெரிவித்தாக வேண்டுமே என்பதற்காக நிதியமைச்சர் கதை, வசனத்தைக் குறைத்துப் பேசக்கூடும்.

தமிழகத்தில் நாடகங்கள் மிகக் குறைவு என்று பெரிய பத்திரிகைகளெல்லாம் அலறித் துடிக்கின்றன. போட்டிகள் நடத்துகிறார்கள். அந்தப் போட்டிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் நீதிபதிகளில் நமது சுப்ரமணியமும் ஒருவராக இருக்கிறார். தன்னுடைய வாயால் பரிகசிக்கப்படும் தொழிலுக்கு, தானே பாராட்டுரை வழங்கி பரிசையும் தர ஒப்புதல் தந்திருக்கிறாரென்றால், உண்மையிலேயே அவர் கதை, வசனத்தைக் குறைகூறுகிறாரா, அல்லது அந்த ஆற்றல் தி. மு. க. வினர் இடத்திலே நிறைந்துவிட்டது என்பதற்காக குறைத்துப் பேசுகிறாரா என்பது மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும்.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரான சாமிநாத சர்மா அவர்கள் தமிழகத்தில் நாடகங்கள் குறைந்துவிட்டனவே என்று மெத்த வருத்தப்பட்டு சென்ற கிழமை பேசி இருக்கிறார். சென்னை மாநிலத்தின் கவர்னராக இருந்த பி. வி. ராஜமன்னார் அவர்கள், 'கதை, வசனம்எழுதச் சந்தர்ப்பம் கிடைத்தால் மகிழ்வோடு ஏற்றுக்கொள்வேன்' என்கிறார். ஆனால் அமைச்சர் சுப்ரமணியம் கதை வசனம் எழுதுவது மிகச் சுலபம் என்கிறார். அரசியல் மிகக் கடினம் என்கிறார். அரசியல் கடினம் தான். அதற்காக கதை வசனம் எழுதுவது இலகுவானதாகி விடுமா?

ஆரம்ப காலத்தில் 'கல்கி' ஒரு படத்திற்கு வசனம் எழுதிய போது அவரைப் புகழாத காங்கிரஸ் தலைவர்கள் இல்லை. வான் முட்ட வர்ணித்தார்கள். இதுவன்றோ 'அமரசிருஷ்டி' என்றார்கள். படம் விழுந்தது. பாராட்டுக்கள் காற்றோடு கலந்தன. தன் கரம் பட்டால் கரியாகும் காரியம், எதிரியின் கரம் பட்டால் பொன்னாகும்போது சொந்தக் கரத்தை நொந்துகொள்ள மனமில்லாமல், அந்தக் காரியத்தையே குறைத்துப் பேசுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சி வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராட்டம் நடத்திய காலத்தில் பொதுமக்கள் உள்ளத்திலே இலட்சிய

— 3-ம் பக்கம் —

★ பற்றற்றான் யார்? ★

**'பற்றுக பற்றற்றான்
பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'**
(குறள் 350)

என்பது திருக்குறள், 'துறவு' என்ற அதிகாரத்தில் பத்தாவது குறளாக அமைந்துள்ளது.

'பற்றற்றான்' என்ற தொடருக்குப் பரிமேலழகர், "எல்லாப் பொருளையும்பற்றி நின்றே பற்றற்ற, இறைவன், கடவுள் வாழ்த்திற்கேற்ப ஈண்டும் பொது வகையால் பற்றற்றான் என்றார்" என்று விளக்கந் தருகின்றார்.

'பற்றறுத்தான்' என்று மணக்குடவர் உரைவிடுக்கின்றார்.

'காரணவுபாதி எழு காரியத்தில் பற்றான்' என்று பரிதியார் குறிக்கின்றார்.

'பொதுவாக இம்மூவரும்கொண்டுள்ள கருத்து இறைவனைப்பற்றியதாகும்' என்பது வெளிப்படை. ஆனால், திருச்சித் தமிழ் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், 'பற்று அற்றான்' என்பதற்கு, 'முற்றத் துறந்த துறவி' எனப் புது விளக்கங் காண்கின்றார். நாம் ஆராய்வோம்.

'பற்று' என்ற சொல்லுக்குப் பல பொருள்களுண்டு. அவை, செல்வம், நட்பு, துணை, வயல், அன்பு, ஆசை, விருப்பம் என்பன, வாகும். ஆனால் இக்குறளில் வரும் ஆறு பற்றுக்களும் வேறு வேறு பொருள் படுவதைக் காணலாம். ஈண்டு ஆராயப் புகுவது பற்றற்றான் என்பவன் யார்? என்பதுபற்றியாகும்.

திருவள்ளுவப் பெருந்தகை, இல்லறம்–துறவறம் என்ற இரு அறங்களையும் மிகத்தெளிவாகக் கூறுகின்றார். ஆனால், 'அறனெனப்பட்டதே 'இல்வாழ்க்கை' எனத் தேற்றேகாரத்தோடு இல்லறத்தையே உயர்ந்த அறமாகக் கொள்கின்றார். இல்வாழ்வார்க்கு சில கடமைகளைச் சொல்லுகின்றார். துறவு நெறியாளருக்கும் சில விதிகளை விதிக்கின்றார். அச்சில விதிகளில் இக்குறட்பாவில் தலையாய ஒரு பணிபற்றிப் பேசுகின்றார். உலகத்தேருக்கு உழவன் அச்சாணியாவதுபோல், துறவறத்தேருக்கு இக்கடமை அச்சாணியாக அமைந்துள்ளது என்பதை யாரும் அறிதல் நலம்.

துறவறப் பணிகளுட் சில:–

1. மனம் பொறி வழி போகாது நிறுத்தி, அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்புதல்.

2. தீய ஒழுக்கங்களைக் கடிந்து நல்வழி நிற்றல்.

3. தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா வுயிர்கள்மேலும் கருணை காட்டல்.

4. யாண்டும் மெய்மை வழியே நிற்றல்.

5. பிறர் உடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாது நிற்றல்.

6. சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன் மாட்டு உள தாயவிடத்தும் அதனைச் செய்யாத திறத்தொடு நிற்றல்.

7. ஓர் அறிவு முதல் ஐயறிவு ஈறாகவுள்ள உயிர்களைச் சோர்ந்தும் கொல்லக் கருதாது நிற்றல்.

8. தனக்கு ஒரு பயன் நோக்கியாதல் செற்றம்பற்றியாதல் சோர்வானுதல் ஓர் உயிர்க்கும் இன்னாதவற்றைச் செய்யாது ஒழுகல்.

9. உலகவியல்பிற்கு ஏற்றவாறு செயல் முனைந்து நிற்றல்.

10. மெய்யுணர்ந்து உய்யும் நெறி படர்தல்.

11. பிறர் பொருள் மேற் செல்லும் ஆசையை அறுத்து ஒருமை நெறி நிற்றல்.

12. தோற்றமுடையன யாவும் நிலைத்தலில்லை என்பதை உணர்ந்து தேறல்.

மேற் கூறிய காரணங்கள் அனைத்தும் துறவின் இலக்கணங்களாக வள்ளுவப் பெருந்தகை குறித்த அறவுரைகள், இஃதை ஒவ்வொரு துறவியும் உணர்ந்து நடத்தல் நலம். இவ்வேதுக்களிலிருந்து ஒருபெரும் உண்மை வெளிப்படுவதை–ஏன்? வள்ளுவராலேயே வற்புறுத்தப்படுவதை எல்லோரும் அறிய வேண்டும். அஃதாவது, **பிற உயிர்களுக்காகவே துறவி வாழ வேண்டும்** என்பது சிறப்பாக ஆறறிவு படைத்த மனித இனத்திற்குத் தொண்டு செய்வதே, துறவி இறைவனுக்குச் செய்யும் பணியாகும். இக்கருத்தைச் சமயப் பெரியார்களும் போற்றிப் பணித்துள்ளனர்.

திருமூலர்: 'எல்லாம் வல்லான் என்று கருதப்படும் இறைவனுக்குப் பணிசெய்வதாலோ, அல்லது அவனைப் பற்றி வாழ்வதாலோ, அவனுக்கு ஈவதாலோ, அப்பணியும்–வாழ்வும்–ஈதலும் மக்களுக்கு எவ்விதப் பயனும் நல்குவதில்லை. ஆனால், மக்களுக்காகச் செய்யப்படும் பணியும் வாழ்வும் ஈதலும்–இறைவனுக்குச் செய்ததாகக்கருதப் படும் என்ற பொன்பொருளை,

**'படமாடுங் கோயிற்
பகவற் கொன்றியில்
நடமாடுங் கோயில்
நம்பர்க் கங்காக
நடமாடுங் கோயில்
நம்பர்க் கொன்றீயில்
படமாடுங் கோயிற்
பகவற்க தாமே'**

என்று திருமந்திரம் பாடிய திருமூலர் திகழ வைக்கின்றார்.

அப்பரடிகள்: 'துறவிகளுடைய செயல் முழுதும் மக்களுக்கே பயன் பட வேண்டும். மக்களுடைய வாழ்வே மகேசனுடைய வாழ்வு' என்ற பொருளில்,

'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனத் தன்னுடைய உள்ளுணர்வைத் தெரிவிக்கின்றார். திருநாவுக்கரசர்.

வடலூர் வள்ளலார்: 'அணுவளவும் பேதஉணர்வு இல்லாது எந்த உயிரும் தன்னுடைய உயிர் போற் பேணுகின்றவர் தம் உள்ளத்தே தான் இறைவன் குடி கொள்கின்றான். அந்தத் தன்மை உடையவர்க்கே நாளும் பணி செய்ய விழைகின்றேன்.' என்ற பொருள்பட இராமலிங்க அடிகளார் ஒரு பாடல் பாடியுள்ளார்.

**'எத்துணையும் பேதமுறா
தெவ்வு[illegible]ரும்
தம்முயிர்போல் எண்ணியு[illegible]ளே
ஒத்துரிமை உடையவராய்[illegible]
உவக்கின்றார் யாவரா
அவருளந்தான்
சுத்த சித்துருவாய்
எம்பெருமான் நடம்புரியும்
இடமெனயான்
தெளிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல்
புரிந்திட யென்
சிந்தைமிக விழைந்ததாலோ'**
(—திருவருட்பா)

சமயப் பெரியார்களைத் தவிர, மற்ற அறிஞர்களும் இவ்வாறு கூறி வருவதை நாம் காணலாம்.

அண்ணல் காந்தியடிகள், 'தரித்திர நாராயணர் வழிபாடே ஆண்டவன் வழிபாடு' எனக் குறிப்பிடுகின்றார். திராவிடத்தின் தளபதி அறிஞர் அண்ணா அவர்களும், 'மக்களுக்குச் செய்யும் பணியே மகேசனுக்குச் செய்யும் பணி' என்று மொழிகின்றார். தவயோகி சுத்தானந்த பாரதியாரும், 'எத்துணை நற்றெண்ணி இவ்வுலகிற்கு அன்பு செயல் அத்துணையும் ஆன்ம விரிவாம்' எனச் சுட்டுகின்றார்.

இப்பெரியார்களின் கருத்துக்களிலிருந்து ஒரு சிறந்த அறத்தை அனைவரும் உணர்கிறோம். அதுவே, **'மக்கட்பணி'** என்பது.

பற்று' என்ற சொல் 'செல்வம் என்ற பொருளில் திருக்குறளில் இரு இடங்களில் கையாளப்படுகின்றது.

**'பற்றற்ற கண்ணும்
பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள'
'படியுடையார் பற்ற மைந்தக்
கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்த லரிது'**

உலகப் புலவர் இக்கருத்தைக் கூறுவதற்குச் சிறந்த காரணமும் இருந்திருக்க வேண்டும். புலித் தோல் போர்த்திய பசுவாகச் சில துறவிகள் வள்ளுவர் காலத்திலேயே பவனி வந்திருக்கிறார்கள். இன்றும் வந்துகொண்டுதானிருக்கிறார்கள். இப்போலிகளைத் திருத்துவதற்காகவே, வள்ளுவர் இக்குறளைப் பொதிந்து வைத்தார் எனக் கொளல் வேண்டும். 'ஆண்டவன் ஆண்டவன்' என்று உலகை ஏமாற்றும் சன்னிதானங்களைக் காண்கிறோம். அவர்கள் 'இறைவன் இறைவன்' என்று இயம்புவதால் மக்கட் தொண்டர்களாகவா மாறியிருக்கிறார்கள். விரல்விட்டுஎண்ண ஒருவருமே இல்லையே? பின் எப்படிப் 'பற்றற்றான்' என்றால் இறைவனென்று செப்புகிறார்கள். அத்தனையும் கண் கட்டு வித்தைகள் மக்களை ஏமாற்றும் வழி முறைகள்.

கும்பமேளாக் கள்ளத் துறவிகளையும், திருவாடுதுறைத் திருத்தொந்திகளையும்–தருமபுரச் சன்னிதானங்களையும்– ஏழைகளின் தொண்டர்களாகவா காண்கிறோம்? இல்லை அதற்கு நேர்மாறாகக் கண்டு வேதனைப்படுகின்றோம். எனவேதான், திருவள்ளுவர், அன்றே துறவிகளுக்குரிய பணியைத் தெள்ளத்தெளிய விளக்கிச் சென்றார். இதைத் தமிழகம் உணர வேண்டும்.

ஒருவனுக்குப் பொது நலம் தோன்ற வேண்டுமானால், இறைவனைப்பற்றினால் தோன்றிவிடுமா? அல்லது அவ்விறைவனின் அடியவனென்று கருதப்படும் துறவியைப் பற்றினால் தோன்றிவிடுமா? என்ற வினாக்களுக்கு விடை காணின் வேதனைதான் நிரம்பும்.

இறைவனைச் சொல்லுவது பொருந்துமா?

இன்னும் 'அற்றார்' என வள்ளுவர் குறிப்பிடும்பொழுதெல்லாம், பொருளற்றவரையே நம் கண்முன் காட்டுகிறார்.

**'அற்றார் அழிபசி தீர்த்தல்
அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப்பு ழி'
'அற்றார்க் கொன்றாற்றாதான்
செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று'
'அற்றவர் என்பார்அவர்
வற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர்'**

என்ற குறளில் மட்டும் அவா அறுவதைப்பற்றிச் சொல்கின்றார்.

எனவே, 'பற்றற்றான்' என்ற தொடருக்குப் பொருள் கூறப் புகின் 'செல்வமற்றவன்' அஃதாவது, 'நல்கூர்ந்தனுகிய ஏழை' என்று உரைக்கலாம். பரமன் மேற் பற்று உள்ளதாகக் காட்டிக்கொள்ளும் பக்தர்கள் இக்கருத்தை ஒப்பமாட்டார்கள் அவர்களுக்கு ஒன்று கூறுவோம். அதாவது சிந்தித்துத் தெளிந்து முடிவு காணல்நலம்.

மனிதப் பிறப்பில் ஒரு சிலரைத் தவிரப் பெரும்பாலோர் 'யான்' 'எனது' என்ற பற்றுடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

இயல்பாகயுள்ள 'யான்' 'எனது' என்ற பற்றுக்கள் நீங்க வேண்டுமானால், யாருமற்ற ஏழை மக்களிடம் அன்புகொள்ள வேண்டும். மக்களிடம் அன்புகொள்ளுவதைக் காட்டிலும், ஏழை மக்களிடம் பற்றுக்கொண்டு பணி புரிவது சிறந்ததாகும்.

துறவியையும்– இறைவனையும் பற்றி வாழ்வதால் நாட்டுக்குஎன்ன நன்மை? ஒரு நன்மையுமில்லை. இவ்விருவர் பெயராலும் நாட்டில் குழப்பங்கள்தான் மலிந்து கிடக்கின்றன. அன்றும் போராட்டம்– இன்றும் குழப்பங்கள் இக்கருத்தைச் சிந்திக்க வேண்டும்.

மேற்காட்டிய ஆதாரங்களைக் கொண்டு, குறளுக்கு இப்படி உரை வகுப்போம்:

**'பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'**

பற்றற்றான்– துணையேதுமில்லாத ஏழையின்
பற்றினை–அன்பினை
பற்றுக–மனத்துட்கொள்க,
பற்று–'யான்' 'எனது' என்ற செருக்கை
விடற்கு–விட்டு நீங்குவதற்கு,
அப்பற்றை– அவ்வேழையின் அன்பினை
பற்றுக–மீண்டும் வலிதாக மனத்துட்கொள்க.

ஏன் இரு தடவை 'பற்றுக' என்று கூறுகின்றாரெனின் 'யான்' 'எனது' என்ற பற்றின் வலிமை குறித்து.

'பற்றற்றான்' என்பது ஈண்டு சாதியொருமை.

எல்லோரு மின்புற்றிருக்க நினைப்பதுவே துறவின் தூயநெறி, அதுவே மகேசனிடம் காட்டும் அன்பு.

—கசி. இராசியண்ணன்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 ‖ 7–6–58 ‖ இதழ் 47

டி'கால்!

ஜெனரல் டி'கால் பிரான்சின் பிரதம மந்திரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டார். ஜூன் முதல் தேதி கூடிய தேசீய சட்டசபை 329 வாக்குகள் ஆதரவாகவும் 224 வாக்குகள் எதிராகவும் அளித்து அவரைப் பதவியில் அமர்த்தியிருக்கிறது.

அவர் தனது கொள்கை விளக்க அறிக்கையை வெளியிட்டதும், சபையில் கூடியிருந்த 596 பிரதிநிதிகளும், அதுபற்றி விவாதித்தனர்; அப்போது அவர் பதவிக்கு வருவதை எதிர்க்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள்—500 பேர் கொண்ட கோஷ்டியினராக—சபைக்கு வெளியே நகரின் மையத்தை நோக்கி ஊர்வலமாக வந்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

பல்லாயிரம் போலீசாரும் இராணுவத்தினரும், டிகால் பதவிக்கு வருவதுபற்றிய விவாதம் சபையில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, சபையைக் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

டிகால் அமைச்சரவையில், கத்தோலிக், சோஷலிஸ்டு, கன்சர்வேடிவ், ரேடிகல் கட்சியினர் இடம் பெற்றிருக்கின்றனர்.

கடைசியாகப் பிரதமராக இருந்த பிளிம்ளின் உட்பட பழம் பெரும் அரசியல்வாதிகள் பலரும் இடம் பெற்றிருக்கின்றனர்.

ஆறுமாத காலத்திற்கு இந்த அமைச்சரவைக்கு, எந்தவித நடவடிக்கை மேற்கொள்ளவும் முழு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதுவன்னியில், சர்க்கார் நிர்வாகத்தையும், சட்டமன்றத்தையும் பிரிப்பதற்கு, பிரெஞ்சுக் குடியரசுடன் தொடர்புடைய மக்கள் குடியரசுடன் கொண்டுள்ள உறவுகளைப் புதுப்பிக்க, அரசியல் சட்டத்தை வாக்கெடுப்பு மூலம் மாற்றவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்.

டிகால் பதவிக்கு வருவதை எதிர்த்துப் பேசிய பலரும், 'டிகால் பதவிக்கு வருவது, பாசிச ஆபத்தினை விலைக்கு வாங்குவதில் முடியும் எனக் கண்டித்திருக்கின்றனர்.

அல்ஜீரியாவில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி, விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க முற்படுவார் டி'கால் என்றும், இதனால்தான், டி'கால் பதவிக்கு வருவதை அல்ஜீரியாவில் உள்ள இராணுவத்தினரும், பிரெஞ்சுக் குடியேற்றக்காரர்களும் ஆதரிக்கின்றனர் என்றும், இது பிரான்சிற்கு நல்லதல்ல என்றும் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

—ஒற்றுமையைப் பற்றியும், சமாதானத்தைப் பற்றியும், ஜனநாயகத்தைப் பற்றியும் வரவேற்றுப் பேசினால்தான் நாட்டிலே மதிப்புண்டு என்ற நிலை வளர்ந்து வரும் காலத்தில் பிரஞ்சு நாடு இடறி விழுந்தது குறித்து பெரும்பாலான அரசியல் தலைவர்கள்—பொதுமக்களின் நலனுக்கான கொள்கைகளை வைத்துக் கொண்டிருக்கிற தலைவர்கள் மிகுந்த கவலைக்குள்ளாகியிருக்கிறார்கள். வரலாற்றாசிரியனின் உற்சாகத்தை பிரஞ்சு நாடு சற்று தடைப்படுத்தியிருக்கிறது.

சர்வாதிகாரிகளின் சரித்திரம் எவ்வளவுதான் படிப்பினைகளைத் தந்திருந்தாலும், பிரஞ்சுநாடு அதனைப் புரிந்துகொண்டும் சர்வாதிகாரத்திற்கு வரவு கூறியது வருந்தத்தக்க செயலாகும்.

தனிப்பட்ட மனிதனுக்கு உரிமை இருக்கக்கூடாது என்று எண்ணுவோர்-ஆசைப்படுவோர்தான், சர்வாதிகாரத்தினால் நாட்டுக்கு நலன் உண்டு என்பர். ஏனெனில் சர்வாதிகாரம் வெறியை அடிப்படையாகக் கொண்டது. தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தை அது அழித்துவிடும்.

ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்தையும், அதன் படிப்பினைகளையும் அறிந்துகொண்ட எந்த நாடும் ஜனநாயகத்தினால் கெட்டதில்லை. தொல்லைகளை அனுபவித்ததில்லை. பிரான்சில் குழப்பம் ஏற்பட்டது என்றால் அதற்கு ஜனநாயகம்தான் காரணம் என்பதற்கு ஆதாரமில்லை.

நடந்து போய்க்கொண்டிருந்த் மனிதன் பல்லக்கில் போகத் தொடங்கி, பின் வண்டியில் பிரயாணம் செய்து, அதற்குப் பிறகு மோட்டாரில் போய், இறுதியாக அவன் மறுபடியும் கால் நடைதான் சிறந்தது என்று முடிவு கட்டினால் அவனை உலகம் எப்படி அழைக்குமோ, அந்தப் பெயரை இன்று பிரஞ்சு நாடு பெறத் துணிந்துவிட்டது.

தங்கள் தங்கள் செயல்களை எண்ணி வருந்தி சர்வாதிகாரிகளின் கல்லறைகள் அலறுகின்றன. இன்னும் அந்த அலறல்கள் ஓயவில்லை. இதற்கிடையில் பிரஞ்சு நாடு புதியதொரு சர்வாதிகாரியை மகுடம் சூட்டி விடுகிறது. இந்தச் செயல் பிரஞ்சு நாட்டுக்கு மட்டும் அபகீர்த்தி தரக்கூடியதல்ல; அரசியல் அரங்கிற்கே ஒரு கரும்புள்ளியாகும்.

★ ★ ★

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

வேட்கையை எழுப்ப காங்கிரசார் என்னென்ன செய்தார்கள்?

நாடகங்கள் நடத்தவில்லையா? கே. பி. சுந்தரம்பாளைக் கேட்டால் தெரியும்!

தலைவர்கள் நடிக்கவில்லையா? சத்தியமூர்த்தி நடித்திருக்கிறார்!

பாடல்கள் இயற்றவில்லையா? பாரதியார் பாடல்கள் என்ன, குப்பையா, கூலமா? அத்தனையும் அந்நிய ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் பாடிய தீப்பொறிகள் அல்லவா!

நடப்பது வள்ளி திருமண நாடகமாக இருந்தாலும், அதில் வேலன், வேடன், விருத்தனாக வரும் கதாநாயகன் வள்ளியை மறந்து பகவத்சிங்கைப் பற்றிப் பாடுவான், கதர்க்கப்பல் கொடி தோன்றுதே என்று கூவுவான், கொக்குப் பறக்குதடி பாப்பா - என்பான். இந்தக் காலத்தை நிதியமைச்சர் மறந்துவிட்டாரா?

நாடகம், இலக்கியம் அவசியம் தான்; ஆனாலும் அவர்கள் அரசியலுக்கு ஒரக்கூடாதென்றால், கவிக்குயில் சரோஜினி தேவியார் கவர்னராகப் பணிபுரிந்ததையும், நாவல் நாடக ஆசிரியரான முன்ஷி உணவு மந்திரியாக இருந்ததையும், சிறந்த எழுத்தாளரான சந்தானம் கவர்னராகப் பணிபுரிந்ததையும், காலஞ்சென்ற கல்வியமைச்சர் ஆசாத் சிறந்த இலக்கிய விமர்சகர் என்பதையும் சுப்ரமணியம் மறந்து விட்டார் என்பதைத் தவிர வேறு பொருளில்லை.

என்ன இருந்தாலும் கதை வசனம் எழுதுவது சுலபமானது தான் என்று அமைச்சர் கருதுவாரானால் அந்த இலகுவான காரியத்தைக் கட்டுப்பாடின்றிச் செய்துகொள்ள தி. மு. க. வை அனுமதித்துப் பார்க்கட்டும்!

சினிமாவைப் பற்றியும், கதை வசனத்தைப் பற்றியும் அடிக்கடி பேசிவரும் நிதியமைச்சருக்கு சென்ற வாரம் அறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாகப் பதிலளித்திருக்கிறார்கள்:

"சென்சார் போர்டு குறுக்கீடு இல்லாமல் எங்கள் விருப்பம் போலக் கதை எழுதி, நான்கு படங்களை எடுத்து வெளியிட்டால் எங்கள் விடுதலை இயக்கம் இப்பொழுது உள்ளதைவிட நூறு மடங்கு அதிகரிக்கும். தயவு செய்து அனுமதியளியுங்கள் என்று நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் படம் எடுத்து வெளியிட்ட பிறகு நான் சொன்னது போன்ற நிலை நாட்டிலே ஏற்படவில்லையானால் பொது வாழ்விலிருந்தே நான் விலகிக்கொள்கிறேன்."

"சினிமாவினால் பயனில்லை என்று கருதினால் சினிமாவின் சக்தியையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை – எங்களையும் புரிந்துகொள்ளவில்லை - என்றுதான் அர்த்தம். சுண்ணாம்பிலிருக்கிறது சூட்சமம் என்று நம் தாய்மார்கள் சொல்லுவதுபோல் அதிலே தானிருக்கிறது சூட்சமம்!"

—இந்த அறைகூவலை ஏற்றுக்கொள்ளத் தயாரா? எழுதுவது சுலபம் என்று கூறிவிட்டு எழுதுகோலை மழுக்க எண்ணுவது புறம் நின்று வெல்ல நினைக்கும் நெறிகெட்ட செயலாகும்.

—தென்னரசு.

விரைவில்!

இவர்தான்

எம். ஜி. ஆர்!

ராஜம்-மணாளன்

எழுதுகிறார்.

காதல் பலி!

பி. எஸ். மணியன், பி. ஏ.

நெஞ்சக் காட்டைச் சம்பவ நெருப்பு தனது சூடான நாக்கால் வளைத்து விழுங்கிக்கொண்டிருந்தது. வாழ்க்கையின் வருங்காலத்தை மாளிகையாக்கிவிட நினைத்த என் மனம் மருண்டு தவித்தது. இளநீர்க் குளிர்ச்சியை எதிர்பார்த்தவனின் எண்ணங்களிலே எப்படியோ எரிச்சல் கலந்துவிட்டதே! அலுவலகத்தில் அமர்ந்திருந்த என்னால் வேலையைத் தொடர்ந்து செய்யமுடியாத அளவுக்கு எனது நினைவுகள் ஆடிக்காற்றின் இலவம் பஞ்சாகப் பறந்து திரிந்தன. மண்பானைக்குள் பெரும் பெரும் கற்களைப் போட்டு நிரப்புவதுபோல மெல்லிய மனத்திலே வாழ்க்கைச் சம்பவங்களைப் போட்டு வதைபட்டேன்.

என்னுடைய இளகிய இதயத்திலே இரும்பின் இறுக்கத்தை எப்படி ஏற்படுத்துவது-இந்தச் சிந்தனைதான் மடை திறந்த கண்ணீராகி மனக் கால்வாயிலே ஓட்டம் காட்டியது. எத்தனையோ கொடுமைக்காரர்கள், கல் நெஞ்சுள்ளவர்களின் ஆரம்ப காலம் பெரும்பாலும் அனிச்ச மலர்த் தன்மையாகவே இருந்திருக்கிறது. வாழ்க்கையின் கொடுமையான அனுபவம் ஒவ்வொரு தடவையும் இலேசான இதயத்திலே குத்திக் குத்தி அதைக் கெட்டியாக்கிவிடுகிறது! அப்படிப் பாறையாகிவிட்ட நெஞ்சைப் பதமுள்ளதாக்கக் கண்ணீராலும் முடியாது, கவர்ச்சியாலும் முடியாது போய்விடுகிறது. இந்த நிலைக்கு என்னை ஏன் தயாரித்துக்கொள்ளக் கூடாது!

முப்பதாவது வயதைக் கடந்துகொண்டிருந்த நான் பத்திரிகையொன்றில் பொறுப்பான பணி செய்து வந்தேன். இயற்கையிலேயே நீச்சல் தெரிந்த மீன் குஞ்சு தண்ணீரைக் கண்டு பயப்படுகிறதென்றால் அதற்கு ஏதாவது காரணமிருக்கவேண்டுமல்லவா! விராலோ விலாங்கோ அதை இரையாக்கும் முயற்சியில் ஒருவேளை ஈடுபட்டிருக்கலாம்! வாலிபனொருவன் திருமணத்தைக் கண்டு அஞ்சுகிறானென்றால் அவனின் வாழ்க்கையிலே ஏதோவொரு திருப்பம் ஏற்பட்டிருக்கத்தான் வேண்டும். என்னைப் பொறுத்த மட்டிலும் பத்து வருடங்களுக்குமுன்பு நடந்த ஒரு சம்பவம் எனது மனத்தை வெறுங்கூடாக மாற்றிவிட்டது. அன்னத்தின் நினைவு எனக்குப் படித்துத் தந்த அனுபவத்தால் நான் திருமணத்தைப்பற்றிப் பயப்பட்டேன். வாலிபப் பருவத்தை வாழ்க்கைப் பகுதியிலேயே கொஞ்சும் கிளியெனக் கூறலாம். நான் எனக்குத் தெரிந்தோ தெரியாமலோ அதைக் கொத்தும் கிளியாகப் பழக்கிவிட்டேன்.

கோழையின் இதயத்தில்கூட வீரத்தைக் குடியேற்றும் சக்தி நிச்சயமாகக் காதலுக்கு உண்டென்று சொல்லலாம். ஆனால் அந்த வீரம் பெரும்பாலும் காதலிலே தோல்வி கண்ட பிறகுதான் ஏற்படுகிறது— நான் இதற்கு நல்ல உதாரணமாக விளங்கினேன்.

வாழ்க்கையின் பத்து வருடப் பல மாதிரியான அனுபவங்கள் என்னிடம் திணித்த துணிவுமாத்திரம் அன்றைக்கே இருந்திருந்தால் பூக்காடாக எனது எதிர் காலம் மணத்திருக்கும். புதர்க் காடாக நான் வருங் காலத்தை ஆக்கிக்கொண்டதற்கு அன்னத்தைப் பொறுப்பாளியென்று கூறமாட்டேன். காதலிக்க வேண்டுமென்கிற ஆசை இருந்த அளவுக்கு அச்சத்துக்கும் அகத்தில் இடம் கொடுத்த தப்பு என்னுடையதே. மக்கள் கூட்டம் திருமணத்தை நோக்கி எவ்வளவு திடுக்கிடும் தடைகளை விதிக்கிறது என்பதைத் தெரிந்திருந்தும் அவைகளை உடைத்தெறியத் தைரியமில்லாதபோது காதலிக்க நினைத்த என் எண்ணங்களையே குறை கூற வேண்டும்!

அன்னமும் நானும் ஒரே தெருவில் வசித்தோம். சாதாரண நாகரீகத்திலே கவர்ச்சியைக் குழைத்துத் தேய்த்துள்ள அன்னத்தின் உடலமைப்பு என் உள்ளத்தை இழுத்தது. மனிதன் பணத்தையோ மற்ற பொருள்களையோ பாதுகாக்க நினைக்குமளவுக்கு மனத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒரு பெண் தனது மனத்தை இலேசாகத் தொட நினைத்தாலும்கூட வாலிபன் அதை அவளிடம் சரணடைய வைக்கத் தயாராகிறான். இந்தத் தனது பலக் குறைவிலே ஏதோவொரு சாதனையைச் செய்துவிட்டதாகப் பெருமைப்பட்டுக்கொள்ளுமளவுக்கு அவனது நினைவுகள் பூரிப்புக்கொள்கின்றன.

அன்னம் சில தடவைகள் என் மீது பார்வையைச்செலுத்தியவுடன் நான் மனத்தை அவளிடம் ஒப்படைத்துவிட்டேன். அளவுக்கு மீறிக் காற்றடித்தால் உடைந்துவிடும் பலூனைப்போலவே, அளவுக்கு மீறி ஒரு பெண்ணின் நினைவுகளுக்கு இடம் கொடுக்கும் இளைஞனின் மனமும் மாறுகிறது. என் இதய நரம்புகளைக் கிழித்தெறியும் முயற்சியிலே சமுதாயத்தின் கத்திச் சட்டங்கள் தலை காட்டின.

"அழகர்— அன்னம்" இப்படி என்னுடைய பெயரையும் அவளது பெயரையும் எழுதி எழுதிப் பொருத்தம் பார்த்துக்கொண்டேன். நினைவுகளில் அவளது உருவத்தை அழுத்தினேன். சொல்லோசையிலெல்லாம் அந்த வெல்லப் பெயரின் இனிப்பைப் பெருக்கினேன்.

எனக்கு மிகவும் பொருத்தமாகத் தெரிந்த அன்னம், மக்கள் மன்றத்தின் முன்னாலே பொருத்தமில்லாதவளாகக் கருதப்பட்டாள். சாதி எங்களை இணையவிடாது தடுக்கிறதாம், ஓயில் பரப்பிய எண்ணக் கூட்டங்களையெல்லாம் ஒடித்து ஒடுக்குகிறதாம்!

இன்னல்களுக்கிடையே மரத்தின் உச்சியிலேறி எடுக்கும் தேன் மிக்க சுவையாயிருப்பதாகத் தெரிகிறது. காதல்-தேன் குடிக்கத் துடிக்கிற அளவுக்குக் கஷ்டத்தைத் தாங்கும் சக்தியையும் பெறவேண்டுமே! நெஞ்சை ஆட்சி செய்தவளைக் கரம் பிடிக்கச் சாதியை எதிர்த்துப் போராடக்கூடிய தைரியம் எனக்கில்லாதபோது நான் எப்படி இனிப்பு நிரம்பிய எதிர்காலத்தை உருவாக்கமுடியும்!

அன்னம் அடுத்தவனின் மனைவியாகிவிட்டாளென்றால், அந்தத் தவறுக்குப் பாதையமைத்தவன் நானே தான். காதலைப் பசும் பொன்னுக்கு ஒப்பிட்டோமென்றால் அதை நல்ல நகையாக மாற்ற வேண்டிய உழைப்பைத் தரக்கூடிய கடமை, காதலிக்கும் வாலிபனைச் சேருகிறது. நான் உழைப்புத் தராது பயனை அனுபவிக்க நினைத்தேன். உலகம் அந்த அளவுக்கு ஏமாந்துவிட இன்னும் ஊமையாகிவிடவில்லையே!

அன்னம் பறந்துவிட்டாள் - அதனால் அவளை மறந்துவிட்டோம் என்கிற நிலை எனக்கு ஏற்படவில்லை. விசை போடப்பட்ட மின்சார விசிறியாகச் சுழன்றுகொண்டிருந்த என் மனம் முழுமையிலும் காற்றாகக் கலந்துநின்றாள் அன்னம்.

உடைந்துவிட்ட அதே பந்து வேண்டுமென அடம்பிடித்து அழும் சிறுபிள்ளைத்தனத்தைக் காதல் உலகத்திலும் நான் திணித்தேன். பிரிக்கப்பட்டுவிட்ட அதே அன்னத்தை நினைத்து நினைத்து என் இதயம் அழுதது. அந்த எண்ணங்களுக்கு ஏற்றம் கொடுத்துக்கொண்டே நாட்களை ஓட்டினேன். வாலிபப் பருவமென்பது கனவுலகத்தின் கிரீடம்போல. அங்கே வண்ணப்புறாவையும் காணலாம், வளைக்கும் வல்லூறையும் காணலாம்! ஆனால் நான் காணும் கனவுகளிலெல்லாம் புறுவாக, வல்லூறாக அன்னமே தோன்றிச் சிரித்தாள், சிதைத்தாள்!

பட்டுப்போன்ற மென்மையான என் மனத்தைக் கெட்டியாக்கிவிட்ட அன்னத்தின் காதலைத் தொடர்ந்து, நான் காதலிக்கவேண்டும், திருமணம் புரியவேண்டுமென்கிற நினைவுகளையெல்லாம் நெஞ்சிலே ஆக்கிரமிப்பு நடத்தவிடாது தடுத்தேன். என்னையும் அன்னத்தையும் பிரித்துவிட்ட சாதியை எவ்வளவு தூரம் ஒழிக்க முடியுமோ அதற்காக உழைப்பதென்கிற உறுதி எனது உள்ளத்திலே ஊன்றிக்கொண்டது.

எல்லா வகையிலும் ஒற்றுமையாகிவிட்ட இரண்டு இதயங்களின் கும்மாளத்தையெல்லாம் வெட்டி வீழ்த்துவதிலே சாதி எத்தகைய சதியைச் செய்துவிடுகிறது! கடும் நஞ்சை, கயிற்றை, கத்தியை, கடலலையையெல்லாம் காதலின் முடிவாகத் தருவதிலே சாதிக்கு முழுப்பங்கு உண்டல்லவா! பல வருடங்கள் பழகிய நண்பனைவிட ஒருநாள் பழகிய சாதிக்காரனுக்கு முக்கியத்துவம் கொடுக்குமளவுக்குக் குறுகிய நோக்கமுள்ள சாதித்துவ சமுதாயத்தை மாற்றியமைக்கும் நோக்கத்திலே நிறுவப்பட்ட "தோழமைக் கழகத்"தில் உறுப்பினனாகிவிட்டேன். என்னைப்போல பாதிக்கப்பட்டு இருதயத்தை வீங்க வைத்துக்கொண்டவனுக்குத் தானே சாதியின் கொடுமைபற்றி நன்றாகத் தெரியமுடியும்! காலம் உதிர்ந்துகொண்டேபோனது. நான் பத்திரிகை அலுவலகத்தில் பணிபுரியும் வாய்ப்புப் பெற்றேன்.

பதுங்கியிருக்கும் புலியைப்போன்றது பருவம்; எந்த நிமிடத்திலே பாய்ந்து தனது ஆசை நகங்களால் கிழித்தெறியுமென்பதை நிச்சயமாகக் கூறமுடியாது. இந்த உண்மையைத் தெரிந்துகொள்ள நான் பல வருடங்களை ஓட்டவேண்டியிருந்தது.

தனியாக ஒரு வாலிபன் திருமணமே வேண்டாமெனச் சொல்லி வாழ்க்கையில் பயணம் செலுத்தும்போது, உலகம் அவனைப் பார்த்துச் சந்தேகப்படுவது இயற்கையாகிவிட்டது. என்னைப் பற்றிக் கூற வேண்டுமானால் நான் உண்மையிலேயே மிகவும் பரிசுத்தமானவனாகவே காலத்தைக் கடத்தினேன். அன்னத்தின் நினைவை என் மனம் ஏதோவொரு இலட்சிய வெறியாகக் கற்பனை செய்து கிடந்தது.

— 9-ம் பக்கம் —

198385

ஒரு மாஜியின் வாக்குமூலம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கழிந்த இருபதாண்டுகளைப்பற்றிப் பேசினால் அதுவே அதனுடைய அலங்கோலத்தைத் தெரிவிக்கும். 1939-ம் ஆண்டு இரண்டாவது உலகப்போர் துவக்கப்பட்ட நேரம். ஜெர்மனியும் - ரஷ்யாவும் தோளிணைந்து நின்ற நேரம். இட்லரும் ஸ்டாலினும் ஒப்பந்த ஏட்டில் கையெழுத்துப் போட்டுக்கொண்ட காலம், இந்தியக் கம்யூனிஸ்டுகள் இந்தியக் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்திருந்த காலமாகும்! கம்யூனிஸ்டுகளுக்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே இடம்தந்து ஏற்றுக் கொண்டவர்கள் காங்கிரஸ்காரர்கள்! அன்றைக்குக் கம்யூனிஸ்டுகளிலே இரண்டு வகையினர். காங்கிரசுக்கு உள்ளே இருப்போர், உறவாடிக் கெடுப்பவர்கள். வெளியிலே இருந்தவர்கள், எங்கெங்கோ நுழைய இடம்தேடி அலைந்தவர்கள். 'நீ எங்கேயிருந்தாய்' என்று கேட்கத் துடிக்கும் பலரை "தென்றலின் தோழர்களைக்காண்கிறேன்.' சொல்கிறேன். 'இன்குலாப் ஜிந்தாபாத்' என் குரலிலே ஒலிக்க இந்த மண்ணிலேதான் உலாவினேன். இன்றையதினம் காங்கிரசை முறியடிக்க எங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் என்று மார்தட்டி முழக்கமிடுகின்ற என் மாஜி நண்பர்கள்தான் காங்கிரஸ் கட்சியின் காலடியிலே விழுந்து கிடந்தார்கள். ஏன்-என்னையும் சேர்த்தே கூறுகிறேன். விழுந்துகிடந்தோம்! இரண்டாவது உலகப்போரை துவக்கத்திலேயே உலகினர் அனைவரும் 'ஏகாதிபத்திய யுத்தம்' என்று கண்டித்தபோது நாங்கள் அதனைப் 'பொதுமக்களின் போர்' என்ற புதிய பெயரில் அழைத்து ஆதரித்தோம். எங்கள் தந்தையார் நாடென்று ஏற்றுக்கொண்ட ரஷ்யாவை, இட்லர் தாக்கியவுடன் எங்களது முன்முடிவை மாற்றிக் கொண்டு இந்த யுத்தம் 'ஏகாதிபத்திய வெறியர்களின் போர்' எனவே இந்திய மக்கள் வெள்ளையர்களுக்கு எதிராகத்தான் இயங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டோம்.

People's-War — மக்கள் யுத்தம் என்ற எங்களது பத்திரிகையைப் பார்த்தால் பாசிச வெறியர்களை ஆதரித்தும் எதிர்த்தும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் சொன்ன கருத்துக்களைக் காணலாம்! சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் இரண்டாண்டுகளுக்கு முன்பே இதனை இரண்டாவது மாநில மாநாட்டில் சொல்லிவிட்டாரே! அந்தச் சிங்கநாதம் கேட்டுச் சில்லிட்டுப்போன தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு இன்னும் அந்த அதிர்ச்சி நாடி நரம்புகளின் தளர்ச்சி போகவில்லையே! நீ வேறு ஏன் எடுத்துக் கூறிச் சிரமப்படுகிறாய் என்று இதழோரத்தில் புன்னகை தரும் நண்பர்களையும் உணருகிறேன். இருந்தாலும் என்னை மன்னியுங்கள். இதனைத் தொடர்ந்து படியுங்கள். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருந்த ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும் கீழ்கண்டுள்ள கடிதத்தை அதன் பொதுக் காரியதரிசியாக இருந்த ஆச்சாரியா கிருபளானி அவர்கள் அனுப்பிவைத்தார்.

ஆ. இ. க. கமிட்டி,
முகாம்: பம்பாய்,
21-9-1954.

அன்பார்ந்த........

காங்கிரசிலிருக்கும் கம்யூனிஸ்டுகளைப்பற்றிப் பல புகார்களும் குற்றச் சாட்டுகளும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு வந்துள்ளன. சப் கமிட்டியின் குற்றச் சாட்டுகளுக்கு, எழுத்துமூலம், இக்கடிதம் கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் உமது பதில் என்னுடைய காரியாலயத்திற்கு வந்து சேர வேண்டும். காங்கிரசின் கொள்கைகளின்படிஒழுங்கு நடவடிக்கை ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாதென்பதற்குக் காரணங்களைக் காட்டும்படி இதன்மூலம் கேட்கப்படுகிறது.

தங்கள் அன்புள்ள,
(கையொப்பம்) ஜே. பி. கிருபாளினி

தாய்ச் சபையில் ஒட்டிக்கொண்டிருந்துவெளியேற்றப்பட்ட தமிழரசுக் கழகத்தைப்பற்றித்தான் பலருக்குத் தெரியும். ஆனால் இந்தியக் கம்யூனிஸ்டுகளைத் தனித் தனியாக காங்கிரஸ் காரியக் கமிட்டி மிரட்டியிருக்கிறது, இந்தக் கடிதத்தின் வாயிலாக! எவ்வளவு நல்ல அடிமைகளாக-மழுங்கிப் போனவர்களாக அன்றைக்கு நாங்கள் இருந்தோம்-என்பதை நீங்கள் எல்லாம்தெரிந்து கொள்ள வேண்டுமென்றே தக்க சான்றுகளுடன் உங்களுடன் பேசுகிறேன்! விசாரணையின் முடிவில்-கம்யூனிஸ்டுகள் ஆகஸ்ட் துரோகிகள் சுதந்திரப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த கயவர்கள் கண்டிக்கத்தக்கவர்கள் என்பது அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் முடிவாகும்! விளக்கம் கேட்டவர் கிருபாளினி-குற்றம் சாட்டியவர்கள் ஜவகர்லால்நேரு, வல்லபாய் படேல், கோவிந்த வல்லப பந்த்! கூண்டிலே நின்றவர்கள் கே. எம். அஸ்ராப், பி. ஸி. ஜோஷிபோன்ற வடநாட்டுக் கம்யூனிஸ்டுகள்! அன்றைய தினம்-இன்று துள்ளித் திரிகின்ற தமிழ்நாட்டு ராமமூர்த்தியும் ஜீவானந்தமும் கவனிக்கத்தக்கவர்களாக இருக்கவில்லை! இன்றைக்கும்கூட ஜீவானந்தம் நிலை அப்படித்தான் என்று நான் சொன்னால் நீங்கள் என்ன மறுக்கவா போகிறீர்கள்? என்னுடைய மாஜிக் கம்யூனிஸ்ட் நண்பர்கள்-"பார் காம்ரேட்! இந்தப் பயல் இத்தனை நாளாக உலகக் கண்ணோட்டத்தில் இருந்துவிட்டு-நம்முடைய பாரம்பரியத்துக்கு விரோதமாகிவிட்டவுடன் வீண் புரளியைப் பேசுகின்றான்" என்று பேசிக்கொள்வார்கள் என்பதை நன்றாக உணர்கிறேன். ஏனெனில் என்னிடமே வேறு பலரைப்பற்றி இதைவிடக் கடுமையாகப் பேசியிருக்கிறார்கள்! அவர்களுக்குச் சொல்லுவேன்-என் அனுதாபத்துக்குரியநண்பர்களேஎன்னை கோபிக்காதீர்கள்-நான் சொல்லுவது வீண் புரளியல்ல. அன்புகூர்ந்து-கட்சியின் பொதுக் காரியதரிசி பி. ஸி. ஜோஷி 27-11-45ல் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டிக்கு எழுதியுள்ள கடிதத்தைப் படித்துப் பாருங்கள்-இதுவரையில் படிக்காத நீங்கள் இப்போதாவது உண்மை தெரியப் படியுங்கள்! நான் நிச்சயமாகச் சொல்லுவேன்; இன்றைய தினம் கம்யூனிஸ்டுக் கட்சியிலேயிருக்கும் பலருக்கு, காங்கிரஸ் கமிட்டி கட்டளையிட்டதும்-கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ்காரர்களின் காலைத் தொட்டுக் கும்பிட்டு தாங்கள் குற்றவாளிகள் அல்ல கண்டிக்க வேண்டாம்-காரியக் கமிட்டியிலிருந்து 'கல்தா' கொடுக்கவேண்டாம் என்று விண்ணப்பித்ததும் தெரியவே தெரியாது! பி. சி. ஜோஷி ஆங்கிலத்தில் எழுதிய விண்ணப்பத்தை தமிழில் மொழிபெயர்த்தவர்தோழர்இஸ்மத்பாக்ஷா என்பவர். அவர்கூட என்னைப் போல மாஜியாகிவிட்டார். இருப்பிடமே தெரியவில்லை-விருப்பமுள்ளவர்கள் 'ஜனசக்தி' ஆபீசுக்கு எழுதுங்கள்! ஒருவேளை அங்கேயிருக்கிற புதிய இடம் பிடித்தான்களுக்கு-அந்தப் பழைய தோழரைப்பற்றித் தெரிந்திருக்கலாம்! இன்றைக்கு என்னைப் பார்த்துக் கையைத்தேய்த்துக்கொள்கிறதமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளைக்கேட்டுக் கொள்கிறேன். அமிர்தசரஸ் மாநாட்டு முடிவு ஏதோ புத்தம் புதிய தெம்பைக் கொடுத்துவிட்ட மாமருந்து என்று மயக்க மொழி பேசுகிறீர்களே-உங்களுடைய முன்னைய முடிவுகளெல்லாம் முரண்பட்டுப் போனது ஏன்?

இந்தியக் கம்யூனிஸ்டுகள் இரண்டாவது உலகப் போரை துவக்கத்தில் ஆதரித்தார்கள். பிறகு எதிர்த்தார்கள்! காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே இருந்தார்கள்-பிறகு-விரட்டப்பட்டார்கள்-விலகினார்கள். பாகிஸ்தான் பிரிவினை தேவை-தேவையென்று தோள் தட்டி திரிந்தார்கள். பின்போ பிரிவினை தீது தீது-படிப்பினை போதும்-என்று மாறினார்கள்! 1946-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தாங்களாகப் போட்டியிட்டார்கள். காங்கிரஸ் கட்சியையும் ஆதரித்தார்கள். அதுமட்டுமல்ல, காங்கிரசின் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட்ட முஸ்லீம் லீக் அபேட்சகர்களையும் ஆதரித்தார்கள். சில இடங்களிலே காங்கிரசையும் எதிர்த்தார்கள். 1947ல் சுதந்திர தினம் கொண்டாட கம்யூனிஸ்டுகளுக்கு யோக்யதை இல்லையென்று சொன்னாலும்-கம்யூனிஸ்டுகள்-நேரு சர்க்காரைக் காப்பாற்றுவோம். வாழ்க நேரு சர்க்கார்! என்று இரு கொடியேந்திக் கூவினார்கள்! 1948ல் திடீரென்று ஒரு நாள் நேரு சர்க்கார் ஒழிக அமெரிக்காவின் கையாட்களான எடுபிடிகள் ஒழிக என்று கலவரப் புரட்சியைத் துவக்கினார்கள். ரணதிவே கட்டளையிட்டார். கம்யூனிஸ்டுகள் கதிர் அரிவாளுடன் புறப்பட்டார்கள். பூமிக்குள்ளே பதுங்கினார்கள்-மணலிகள் மணலுக்குள்ளே-கொள்கைப் பிடிப்பை பனையோலைக் காடுகளுக்குள்ளே காட்டிய மாவீரன் இன்றைய 'ஜனசக்தி ஆசிரியர்' ஊரூராக அன்ன நடை நடந்த தமிழகத்துப் பொலிட்பீரோ-இப்போது அவர்கூட அந்த இடத்து மாஜி! இவர்கள் எல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியைக் கழகத்தவரிடையே கொடுத்துவிட்டு எங்கெங்கோ-ஓடி ஒளிந்து கொண்டார்கள்- பிடிபட்டார்கள். கொள்கைகளைத் தூக்கி யெறிந்துவிட்டுச் சரணடைந்தார்கள்! இவ்வளவும் உண்மையென்று சொல்கிற நான் ஒரு மாஜிக் கம்யூனிஸ்டுதான்-மனம் திறந்து பேசுகிறேன். மாற்றான் வீட்டு மல்லிகைப் பூங்காவுக்கு வந்துவிட்டேன். மற்றவர்கள் எங்கே?

-கூடலரசன்.

11-6-58ம் நாள் அன்று மாலை 4 மணியளவில், மாதுங்கா தி. மு. க. 4வது ஆண்டு விழா, தாதர் கிங் ஜார்ஜ் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற இருக்கிறது. அது போது நாஞ்சில் அன்பழகன் குழுவினரின் 'இன்பக் கனவு' நாடகம் நடைபெறும்.

டிக்கட்: ரூ. 5, 3, 2.

கிடைக்குமிடம்:

1. மாதுங்கா தி. மு. கழகப் பணிமனை.
2. தாராவி கிளை, பம்பாய்.

வெண்பாப் போட்டி-19.

ஈற்றடி:

பொல்லாத மாலைப் பொழுது.

முடிவு தேதி 14-6-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

82

M211,N54TL

குஞ்சரத்தின் கதை

தென்னரசு

க தை இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டது. அடுத்த இதழில் முடிய இருக்கிறது. முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் தொடங்கப் பெற்ற குஞ்சரத்தின் வரலாற்றை — வாசகர்கள் அனைவருமே படித்து வந்திருக்கிறார்கள் என்பதை அவர்களின் கடிதங்களின் மூலமாக அறிந்து நான் பெருமைப்படுகிறேன்.

கதை விக்டோரியா மகாராணியார் காலத்தில் நடந்தது. கதாபாத்திரங்களைச் சொந்தம் பாராட்டிக்கொண்ட ஒரு சிலர் பாராட்டுக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். வேறு சிலர் மிரட்டியிருக்கிறார்கள். நான் எந்தக் கட்சியுமல்ல; நடந்த கதையை நாவலாக்கித் தந்திருக்கிறேன். அவ்வளவுதான்!

கதையைத் தொடக்கத்திலிருந்து படிக்கத் தவறிய புதிய வாசகர்களின் விருப்பப்படி, முன்கதைச் சுருக்கம் வெளியிட இயலவில்லை. மன்னிக்கவும். அவர்களெல்லாம் மகிழத்தக்க வகையில், இன்னும் இரண்டொரு திங்களில் இந்தக் கதை புத்தக வடிவில் வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கதையில் சம்பந்தப்பட்ட சின்னங்களின் புகைப்படங்களை புத்தகத்தில் வெளியிட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

கதையைப் பற்றிய மற்ற விபரங்கள், சரித்திரச் சான்றுகள் அனைத்தும் நூலில் விரிவாக வரும்.

-தென்னரசு.

16

இன்னும் கொஞ்சநேரத்தில் பிரான்மலைக்குப் புறப்படவேண்டுமே என்ற அவசரம் அய்யாக்கண்ணு உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்தது. அவரது உறவினர்களில் முக்கியஸ்தர்கள் புறப்பாட்டிற்கான ஏற்பாடுகளுடன் அவருடைய வீட்டிற்கு வந்துவிட்டார்கள். அய்யாக்கண்ணு பரபரப்பாகவே காணப்பட்டதை அவர்கள் உணர்ந்தார்கள். அந்தப் பரபரப்பிற்குக் காரணம் காணாமற்போன கண்ணம்மாவைப் பற்றியது தான் என்று அவர்களுக்குத் தெரியுமா? ஒரு கல்யாணம் என்றால் ஆயிரத்தெட்டுக் கவலைகள், தொல்லைகள் என்ற எண்ணத்திலேயே உறவினர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி இருந்தனர்:

விளக்கு வைத்தாகிவிட்டது! "காட்டுப்பாதை வழியாக வண்டியில் பிரான்மலைக்குப் போவதானாலும் பத்து நாழிகைக்குமேல் பிடிக்குமே! கிழவியிடம் ஜமீன்தார் கொடுத்தனுப்பிய ஓலைப்படி இன்னும் பெண்ணை அனுப்பவில்லையே! விடிந்தால் கல்யாணம்!"-அய்யாக்கண்ணு முணங்கிக்கொண்டு வீட்டுக்குள் போய், அன்று இளையாத்தக்குடியிலிருந்து கிழவி வாங்கி வந்த ஓலையை மறுபடியும் படித்துப்பார்த்தார்.

அய்யாக்கண்ணுக்கு, பொன்னழகர் வரையும் மடல். க்ஷேமம்! உனது ஓலையைப் பார்த்தேன். கவலைப்படாதே! நீ விரும்பியபடி ஒரு அழகான பெண்ணை கல்யாணத்துக்கு முதல்நாள் இரவு நம்பிக்கையான ஆள் வசம் அனுப்பி வைக்கிறேன். அவனிடம் குஞ்சரத்தை அனுப்பி வைத்துவிடவும். இத்தனை காலமும் எனக்கு விசுவாசமாக நடந்துகொண்ட உன்னை நான் மறக்கமாட்டேன்.

இப்படிக்கு
பொன்னழகர்

"பொன்னழகரே கைப்பட எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆனால் இன்னும் அந்தப் பெண் வரவில்லையே! வராவிட்டால் என்ன செய்வது?...என்ன செய்வது! பாரத்தையெல்லாம் அழகு நாச்சியின்மீது போட்டுவிட்டு குஞ்சரத்தையே பெண்ணாக்க வேண்டியதுதான்." என்று சொல்லிக்கொண்டே கோயில் வீட்டுப்பக்கம் திரும்பினார். அங்கே அவர் மனைவி தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள். அழுகையென்றால் அது வாயால் கூறி தீர்த்துக்கொள்ளக் கூடியதா?

இப்போது கொல்லைக்கதவு தட்டும் சத்தம் கேட்டது. அய்யாக்கண்ணு ஓடிப்போய் ஆவலோடு கதவைத் திறந்தார். ஜமீன்தார் பொன்னழகரின் அழகான வில்வண்டி ரதம் போல் நின்றது. தடித்த மீசையோடு கூடிய ஒரு முரட்டுஆள், வண்டியை விட்டு இறங்கி, மெல்லிய கருப்புப் புடவையால் தலையில் முக்காடிட்டபடி வண்டியில் இருந்த இளம் பெண்ணை கீழே இறங்கும்படி சொன்னான். அந்தப் பெண் இறங்கினாள். அவள் கீழே இறங்கியதும், கொல்லை வாசற்படியில் நின்ற அய்யாக்கண்ணு கீழேகுதித்து வண்டிக்கு ஓடி வந்தார்.

"அப்பா! அப்பா!!"—அந்த யுவதி கூவினாள்.

அய்யாக்கண்ணு வெறிபிடித்தவரைப்போல் அந்தப் பெண்ணையே பார்த்தார். "மகளே மகளே" என்று புலம்பிக்கொண்டிருந்தவர், சொந்த மகளைக் கண்ணெதிரே கண்டதும் எங்கிருந்தோசுயமரியாதைஓடிவந்து அவர் உள்ளத்தைக் கவ்விக்கொண்டது.

"......"-ஒன்றும் பேசாமல் பைத்தியக்காரனைப்போல் வேகமாக ஓடிப்போய் கதவைத் தாளிட்டுக்கொண்டார். கண்ணம்மா மயங்கித் தரையில் விழுந்தாள். வண்டி ஓட்டிவந்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணம்மாவைத் தூக்கி வண்டியில் போட்டுக்கொண்டு அவள் அருகிலேயே உட்கார்ந்துகொண்டான். சிறிதுநேரத்திற்குப் பிறகு கண்ணம்மா மயக்கம் தெளிந்து எழுந்தாள்.

"கண்ணம்மா, இதெல்லாம் என்ன? ஏன் அந்தக் கிழவர் இப்படி ஓடினார்?"

"நீங்கள் மறந்திருப்பீர்கள். எனது சொந்த ஊர் இதுதான். ஓடியவர் என் தந்தை. நான் என் காதலரால் தூக்கிச் செல்லப்பட்டேன். அதற்காக என் தந்தை என் முகத்தைப் பார்க்காமலே ஓடுகிறார்"—கண்ணம்மாவின் கண்களிலே கண்ணீர் மாலை மாலையாக ஊற்றியது.

"உண்மையாகவே இதுதான் உன் சொந்த ஊரா? நீயில்லாமலே உன் தந்தை உனக்கு கல்யாணம் பேசினாரா?"

"கல்யாணமா! யாருக்குக் கல்யாணம்? எனக்கு ஒன்றும்தெரியாதே! மாப்பிள்ளை யார்!"- கண்ணம்மா விழித்தாள். அந்த நேரத்தில், பொன்னழகரின் சிறைக்கூடத்தைக் காட்டிலும் அவளுடைய தாய் வீடு கொடுமை நிறைந்ததாகப்பட்டது.

"மான்கொம்பய்யா!"

"உ...ஸ்...ஸ்! என் பெயரைச் சொல்லாதே! வண்டிக்காரா என்று கூப்பிடு" என்று அவன் சொன்னான்.

"அய்யா, அம்மாவைப் பார்க்க நான் துடித்தேன். பார்த்துவிட்டேன். என்னை உங்களுடனேயே அழைத்துக்கொண்டு போய்விடுங்கள். என்னை என் பெற்றோர்கள் எந்தப் புதரிலேயோ தள்ளப்பார்க்கிறார்கள்! அய்யா! என்னைக் கொன்றுவிடுங்கள். எனக்கு வாழ்க்கை வேண்டாம்! நீங்கள் விரும்பினால், உங்களுக்கு மனம் இருந்தால் நான் சொல்லும் என்னுடைய காதலரிடம் என்னை ஒப்படைத்துவிடுங்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. அய்யா! அய்யா!"- கண்ணம்மா கதற ஆரம்பித்தாள்.

"உஸ்! கண்ணம்மா பேசாமல் இரு! கூட்டம் கூடிவிடப்போகிறது." என்று சமாதானம் சொன்னான் மான்கொம்பு.

இப்போது அய்யாக்கண்ணுவின் கொல்லைக்கதவு மீண்டும் திறக்கப்பட்டது.

கண்ணம்மாவின் தாயார் தலைவிரி கோலமாய் ஓடிவர்தாள்.

"கண்ணம்மா, அடி சண்டாளி, குடும்பத்தையே அழித்துவிடத் துணிந்தாயே!" என்று ஒப்பாரி வைத்துக்கொண்டு கண்ணம்மாவைக் கட்டிப்பிடித்தாள். அந்த வயிற்றெரிச்சல் கலந்த குரலில் அன்பும் பிள்ளைப்பாசமும் கரை புரண்டு ஓடின.

மான்கொம்பு அசையாமல் உட்கார்ந்திருந்தான். கண்ணம்மாவின் தாய் அவன் பக்கம் திரும்பினாள்.

"அப்பா தம்பீ, ஜமீன்தாருக்கு நாங்கள் ஆயுள் முழுதும் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களை எமன் வாயிலிருந்து காப்பாற்றிவிட்டார்" என்று அந்த அம்மையார் சொல்லிவிட்டு கண்ணம்மாவை அணைத்தபடி கூட்டிக்கொண்டு போனார்கள். இளம் பெண்களின் கண்ணீரைக் காணும்போதெல்லாம் தன்னுடைய அருமை மகளை நினைத்து நினைத்து உணர்ச்சிபெறும் மான்கொம்பு அன்று அதிகமாக உணர்ச்சி வசப்பட்டான். தன்னுடைய சபதம் நிறைவேறும் காலம் நெருங்கிவிட்டதென்று அவன் முடிவுகட்டிவிட்டானல்லவா!

கண்ணம்மா உள்ளே போன கால் நாழிகைக்குப் பிறகு, கொல்லைக் கதவு மீண்டும் திறக்கப்பட்டது. அய்யாக்கண்ணு, மணப்பெண்ணைப் போல் அலங்கரித்த ஒரு பெண்ணை வண்டியிலேற்றிவித்தார்.

"குஞ்சரம், எங்களுடைய பராமரிப்பில் குறை ஏதும் இருந்தால் மன்னித்துவிடு! ஜமீன்தாரிடம் எல்லா விபரத்தையும் கூறு. பிழைத்துக் கிடந்தால் உன் கல்யாணத்திற்கு ஒரு வெள்ளித்தொட்டில் செய்து கொடுக்கத்தவறமாட்டேன். உன்னுடைய அடக்கமும் குணமும்தமிழ்நாட்டுப் பெண்கள் அனைவருக்கும் வந்துவிட்டால் எங்கும் சுபிட்சம் நிலவும். எல்லாம் அழகு நாச்சியின் துணையால் நடக்கும். போய்வாம்மா" என்று உருக்கமாகப் பேசி விடை கொடுத்து அனுப்பினார். கடிவாளங்கள் பூட்டிய குதிரையைப்போல் அலங்கரிக்கப்பட்டிருந்த குஞ்சரம் அரும்பு விட்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

வண்டி புறப்பட்டது. மான்கொம்புத்தேவன் மாடுகளை அதட்டி ஓட்டினான். அந்தக் குரல் அவளுக்குப் பழக்கப்பட்ட குரலாகத் தெரிந்தே தவிர தேவனை அடையாளங் கண்டு கொள்ளமுடியவில்லை.

★

பூமணமும், பொட்டுமணமும் புதிதாக அரைத்த சந்தன மணமும் மண வீட்டை புத்துணர்ச்சியில் ஆழ்த்தியிருந்தன. அமைதியான இரவுநேரம். பிரான்மலைக் கோயிலில் ஒரு எண்ணெய்விளக்கு சுழன்று சுழன்று எரிந்துகொண்டிருந்தது.

மணமகன் பஞ்சவர்ணம் இரண்டு நாழிகைகளாக தனியாகவே இருக்கிறான். ஊருக்குள் சென்று உறவு முறைக்காரர்களை அழைக்கப்போன அவனது தாயார் தங்கம்மாள் இன்னும் விடு திரும்பவில்லை. அவனது தந்தையும் வீட்டில் இல்லை. மறுநாள் காலை நடைபெற இருக்கும் தன்னுடைய திருமணத்திற்கான காரியங்கள் வெகு வேகமாக நடைபெறுவதைக் கண்டு பஞ்சவர்ணத்தின் இதயம் இரைந்து இரைந்து ஒடுங்கியது. இந்தத் திருமணம் நடைபெறப்போவதில்லை — என்று அவன் திடமாக நம்பினான். ஆனாலும், அவனது சொந்தக்காரப் பெண்கள் முன்கூட்டியே வந்திருந்து மிகுந்த அக்கரையோடும் பாசத்தோடும் மடமடவென்று செய்துகொண்டிருக்கும் காரியங்களை அவனால் தடுக்க முடியவில்லை. விடிவதற்குள் நடக்கப் போகிற ஒரு தலைகீழ் மாற்றத்தைப் பற்றியே அவன் எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான்.

வீட்டிலே மங்கல வாடை வீசுகிறது. முகப்பிலே பந்தல் அலங்காரம் கோலாகலமாக இருக்கிறது. பெண்களெல்லாம் குதூகலமாக வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பஞ்சவர்ணத்தின் தந்தையிடம் நாட்டியம் கற்றுக்கொண்ட ஆடலழகிகள் எல்லாம் வந்திருக்கிறார்

— 10ம் பக்கம் —



முன்கதைச் சுருக்கம் :

மாத்தூர் உயர்நிலைப் பள்ளியில் பத்தாவது வகுப்பை முடித்து விட்ட மகன் ஞானசம்பந்தனை, கல்லூரியில் பட்டப்படிப்பு படிக்க வைத்து, திண்ணைப்பள்ளிக்கூடத்து அரிச்சுவடியைத் தவிர வேறு படிப்பை யறியாத மாத்தூர் மக்களிடையே ஞானசம்பந்தனை பட்டதாரியாகக் காண ஆசைப்பட்ட பெரியசாமி, கஷ்டப்பட்டு அவனை கல்லூரியில் சேர்த்து வைத்தார். மாதா மாதம் கல்லூரிச் சம்பளப் பணமும், ஞானசம்பந்தன் சொந்த செலவுக்கென்று தனியாகப் பணமும் அனுப்பிவந்தார்.

பெரியசாமி தன் மகன் ஒழுங்காக படித்து வருகிருன் என்ற நம்பிக்கையோடு அனுப்பி வரும் பணம் அத்தனையும் சிகரெட்டு புகையாக மாறிக்கொண்டிருந்தன.

தேர்வு முடிந்து ஞானசம்பந்தன் மாத்தூருக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கையில் ஏகாம்பரம் அவனை ஒய்யார விலாசுக்கு அழைத்துச் சென்று, பல பெண்களைக் காட்டி ஞானசம்பந்தனின் மனதை பழைய நிலைக்கு திருப்ப முயன்ருன். ஒய்யார விலாஸ் நாவிற்கு மட்டும் சுவைதரும் ஹோட்டலாக இல்லை. உடலுக்கும், உணர்ச்சிக்கும் அங்கு உணவு கிடைத்தன.

எங்கோ இருந்தவள், ஊர்பேர் தெரியாதவள், யாருக்கோ உரிமையானவள் ஒய்யார விலாசுக்கு உடலை விற்க வந்தவள், ஞானசம்பந்தனுக்கு மனைவியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

முறையோடு வாழ்க்கைக்கு ஒரு கோடு வகுத்துக்கொண்டு வாழ விரும்பினுள். அந்தக் கோட்டைத் தாண்டிப் போகும்படி தன்னை துன்புறுத்தும் தன் சொந்த மாமன் அருணசலத்தைப் பற்றி ஞானசம்பந்தனிடம் கதை கதையாகச் சொன்னுள். என்னைப் பலருக்கு வியாபாரப் பொருளாக்கி, அதன் மூலம் வரும் வருமானத்தில் அவன் வாழ விரும்புகிருன். அதை நாகரிகமாக நடத்தத்தான் ஒய்யார் விலாசுக்கு அழைத்துவந்தான். தனியறையில் ஆண்களைச் சந்திப்பதே இதுதான் முதல்தடவை; உங்களை நம்புகிறேன் என்னைக் காப்பாற்றுங்கள் என்று ஞானசம்பந்தனின் கால்களில் விழுந்தாள் அமுதவல்லி.

அமுதவல்லியின் அழகு முகமும் களங்கமில்லாத குழந்தை உள்ளமும், ஞானசம்பந்தன் உள்ளத்தில் இரக்க உணர்ச்சியை ஏற்படுத்தியது. "காப்பாற்றுகிறேன். என்ருன்" தனி வீடு அமர்த்தினுன். குடும்பம் நடத்தத் தொடங்கினுன்.

காலாகாலத்தில் ஞானசம்பந்தனுக்கு திருமணம் செய்து மகனையும், மருமகளையும் கண்ணுல் பார்க்க வேண்டுமென்ற ஆசை சிவகாமி அம்மாளுக்கு. அதற்கு அவன் சம்மதத்தைப் பெற ஒரு முறை மாத்தூருக்கு வந்துபோகும்படி ஞானசம்பந்தனுக்கு கடிதம் எழுதினுர்கள்.

அமுதவல்லி ஆடிப்பாடும் சின்னப் பெண்ணுக இருந்து, சிலை வடிவம் பெற்று ஞானசம்பந்தனுடன் சிரித்து மகிழ்ந்து மங்கை ஆனபின் மசக்கை நோயும் உற்ருள்.

உடனே புறப்பட்டு வரும்படி மாத்தூரிலிருந்து கடிதம் வரவே, அமுதவல்லியிடம் விரைவில் திரும்பிவிடுவதாகக் கூறி அவள் கண்ணீரைத் துடைத்து அவளை சமாதானப்படுத்திவிட்டு, மாத்தூருக்குப் பயணமானுன் ஞானசம்பந்தன்.

பெண் வீட்டார் வந்தார்கள். மாப்பிள்ளையை பிடித்திருந்தது. அவர்களுக்கு. சம்மதம் தெரிவித்தார்கள். பலர் முன்னிலையில் வெற்றிலைபாக்கு மாற்றிக்கொண்டார்கள்.

ஞானசம்பந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எல்லாம் குழப்பமாக இருந்தது. மேலும் இங்கிருந்தால் புதிய குழப்பங்கள் உண்டாகலாம், ஆகையால் உடனே சென்னைக்கு புறப்படுவது என்று முடிவு கட்டினுன். எப்படியோ பெரியசாமியையும், சிவகாமி அம்மாளையும் சமாதானப்படுத்திவிட்டு சென்னை திரும்பினுன்.

கல்லூரியில் அன்று தமிழாசிரியர் பழங்கால தமிழர் திருமணம்பற்றி நீண்ட அழகான விளக்கம் தந்து தமிழ் வகுப்பை முடித்தார். ஞானசம்பந்தனின் சிந்தனையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. உடனே பெரியசாமிக்கு கடிதம் எழுதினுன். தன் திருமணம் நடைபெறுவதாய் இருந்தால் புரோகிதர் கூடாது என்று எழுதியனுப்பினுன்.

புரோகிதர் வந்தால் பையனே திருமணம் வேண்டாம் என்கிருன். புரோகிதர் இல்லாமல் திருமணம் என்ருல் ! அவருக்கோ ஒன்றும் விளங்கவில்லை. இதற்கோர் யோசனை கேட்க தன் பால்ய நண்பர் மணிவண்ணன் இல்லத்தை நாடிச் சென்ருர்.

மணிவண்ணன் ஞானசம்பந்தனை, சந்தித்து திருமண விஷயம் பற்றிப் பேசினுர். அவனே தனக்கு இப்பொழுது திருமணமே வேண்டாம் அதைப் பற்றி பிறகு யோசித்துக்கொள்ளலாம் என்று முடிவாகச் சொல்லியனுப்பினுன். அமுதவல்லியின் பரிதாப நிலைமையை நினைக்கும்பொழுது திருமண ஏற்பாடு ஞானசம்பந்தனுக்கு கசந்துகிடந்தது.

அருணுசலத்தின் அரிப்பும் நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. ஒருநாள், அவசரமாக ஐநூறு தேவையென்று, அருணுசலம் ஓடி வந்தான். இரண்டு நாட்களில் தருவதாக உறுதி சொல்லி அவனை அனுப்பிவைத்தான் ஞானசம்பந்தன். அவன் போனபிறகு இரண்டு நாளில் ஐநூறு எப்படிச் சேர்ப்பது என்ற கவலை அவனை அரிக்கத் தொடங்கியது. இந்தச் சமயத்தில் பெரியசாமி வந்து சேர்ந்தார். திருமணம் பற்றிப் பேசினுர். இப்பொழுது திருமணத்திற்கு ஒப்புக் கொண்டால், பெண் வீட்டார், மாப்பிள்ளைக்கு துணிமணி வாங்குவதற்கென்று தந்திருக்கும்ரூபாய்ஐநூறை உன்னிடம் கொடுத்துவிட்டுப்போகிறேன். இல்லையேல் நடக்கிறபடி நடக்கட்டும் என்ருர்.

ஐந்நூறு ரூபாய் என்று கேட்டதும் ஞானசம்பந்தனின் மனம் அருணுசலத்தை எண்ணியது. சிறிது நேரம் சிந்தனை செய்த பிறகு, ஞானசம்பந்தன் ஒரு முடிவுக்கு வந்தான். சரி, உங்கள் விருப்பம்போல் ஆகட்டும்பா என்ருன்.

அருணுசலத்திற்கு ஐநூறுகிடைத்தது. ஞானசம்பந்தனுக்கு மாத்தூரில் திருமண ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

திருமண நாளன்று, கைக்குழந்தையோடு அமுதவல்லியை அழைத்துக்கொண்டு மாத்தூருக்கு வந்து சேர்ந்தான் அருணுசலம். திருமண ஏற்பாட்டை மும்மரமாகக் கவனித்துக்கொண்டிருந்தபெரியசாமியிடம் ஞானசம்பந்தனுக்கும், அமுதவல்லிக்கும் உள்ள தொடர்பைப்பற்றி காதோடு சொன்னுன் அருணுசலம். பெரியசாமி திடுக்கிட்டார். இது பெண் வீட்டாருக்குத் தெரிந்தால் என்ன ஆவது ? அருணுசலத்தை சமாதானப்படுத்தி மாதம் நூற்றியைம்பது தருவது என்றும், அமுதவல்லியையும், குழந்தையையும் அருணுசலம் பார்த்துக்கொள்வது என்றும் ஒரு முடிவு செய்து கையில் கொஞ்சம் தொகையைக் கொடுத்து அவர்களை அனுப்பி வைத்தார்.

பிறகு மங்களகரமாக திருமணம் நடந்துமுடிந்தது. அமுதவல்லியிடம் கற்றிருந்த காதல் பாடத்தையெல்லாம் முதல் இரவில் புதுப் பெண்ணிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று மகிழ்ச்சியோடிருந்தான் ஞானசம்பந்தன். அவளோ, மௌன நாடகம் நடத்தினுள். இரவு முழுதும் இப்படியே கழிந்தது. பொழுது விடிந்ததும் மௌனத்திற்கு காரணம் கேட்டான். அவள் எதையோ நினைத்துக் கொண்டு கண்ணைக் கசக்கினுள். அவன் சொன்னுன்—எனக்கும் அமுதவல்லிக்கும் தொடர்பு உண்டு என்பது தெரிந்ததினுல்தானே, நீ பேசாமல் இருக்கிருய் ! புதுப்பெண்ணுக்கு, புதுக்குழப்பம் ஏற்பட்டது. வடிந்த கண்ணீர் பெருகி ஓடியது. இப்படியே பதினைந்து ஆண்டுகள் ஞானசம்பந்தன் வாழ்க்கை நிம்மதியின்றி ஓடியது. பெரியசாமியும், சிவகாமியம்மாளும் கண்களை மூடினர். அமுதவல்லியும் கவலை தாங்காமல் கண்ணை மூடினுள்.

கட்டிய மனைவிமூலம் குடும்ப விளக்கு என்று சொல்ல, ஒரு குழந்தை பிறக்கவில்லை. அமுதவல்லியின் மகன் வேலய்யன் அருணுசலத்திடம் வளர்ந்து, அவன் தொந்தரவு பொறுக்கமுடியாமல் எங்கோ சுற்றி, கடைசியில் ஞானசம்பந்தனிடமே வந்து சேர்ந்தான். ஞானசம்பந்தனும் பிள்ளையில்லாக்குறையை மறந்துஅவனை செல்லமாக வளர்த்து வந்தான். வேலய்யன் அமுதவல்லியின் மகன் என்பது ஞானசம்பந்தனுக்குத் தெரியாது. பொன்னன் என்ற பெயரில் அருணுசலத்திடம் அவன் வளர்ந்து வருவதாக நினைத்துக்கொண்டிருந்தான்.

ஒரு நாள், பொன்னனை அழைத்துக்கொண்டு மாத்தூருக்கு வருமாறு அருணுசலத்திற்கு கடிதம் போட்டான் ஞானசம்பந்தன். அருணுசலமும் ஒரு போலிப் பொன்னனை தயார் செய்துகொண்டு, மாத்தூருக்கு வந்து சேர்ந்தான்.

கதை அடுத்த இதழில்
தொடரும்.

★

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்...!

பண்டைத் தமிழ் மக்களின் பண்பு, நாகரிகம், சமயம், அரசியல், தொழில் இன்னோரன்ன பிறவற்றைப் பற்றி அறிதற்குத் தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகள், பண்டை நாணயங்கள், தமிழ் நாட்டாரைப் பற்றி பிறநாட்டினர் எழுதிவைத்த நூல்களும் கருவியாக விளங்குகின்றன. இவைகளைக் காட்டிலும் பண்டைத்தமிழ் மக்களின் பண்பினை அறிதற்குத் தமிழ் இலக்கியங்களே சிறந்த சான்றுகளாக உள்ளன. தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு முதலிய சங்க நூல்களில் பழந்தமிழ் மக்களின் பண்பினை விளக்கப் பல சான்றுகள் உள்ளன. மகளிர்களுக்குரிய இயற்கைப் பண்புகள் எவை என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

"அச்சமும் நாணும்
மடனுமுந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்குரிய
என்ப."
(தொல்-1045)

மகளிரின் கடமையினை வள்ளுவர் வாய்மொழியினால் நன்குணரலாம்.

"தற்காத்துத் தற்கொண்டாற்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள்
பெண்."

கடமையும் இயற்கைப் பண்புகளும் ஒருங்கமையப் பெற்ற மகளிர்கள், கற்புநெறியிலும் சிறப்புப் பெற்று விளங்கினர். அவற்றுடன் நில்லாது, வீரமும் கொண்டிருந்தனர், என்பதனைப் புறநானூற்று வீரத்தாயின் "செருமுகம் நோக்கிச் செல்க;மகனே!" என்ற பாடலின்மூலம் அறியலாம். பண்டைக்கால மகளிருள் பலர் புலமை நலத்துடன் விளங்கினர் என்பது, ஔவையார், பாரி மகளிர், குறமகள் இளவெயினி, வெண்ணிக் குயத்தியார் முதலிய பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களால் தெரிகின்றோம். இங்கே பாரி மகளிர் பண்பு நலனை ஆராய்வோம்.

மகளிர் என்பதிலிருந்து இச்சொல்லால் குறிக்கப்படுபவர். எண்ணிக்கையில் ஒருவரல்லர் என்பது விளங்குகின்றது. இலக்கிய மரபுப்படி இவர்கள் இருவர் என்பது பெறப்படுகிறது. அங்கவை, சங்கவை என்பன அவர்களுடைய பெயர்களாம். மேலும் பாரி மகளிர் என்னும் தொடர் அம்மகளிர் பாரியினுடைய புதல்வியர் என்பதனையும் தெரிவிக்கிறது. பாரி என்னும் பெயர் தமிழ் இலக்கியச் சுவரில் பொன்னால் பொறிக்கப்பட வேண்டிய தலைசிறந்த ஒன்றாகும். தமிழ்நாடு பெற்ற வள்ளல்களில் மிகச் சிறந்தவன் வேள் பாரி.

வேள்பாரி, வள்ளல்கள் எழுவரில் ஒருவன். பறம்புமலையினைக் கொண்ட நிலப்பகுதியை ஆண்டவன். பறம்புமலை இவனின் பறம்பு நாட்டிலுள்ளது. இஃது வளமிக்கமலை; ஆங்கு உழவர் உழுதொழிலைச் செய்யாமலே மூங்கில், பலாப்பழம், வள்ளிக்கிழங்கு, தேன் முதலிய பல பயன்களைத் தரும். அங்கு சான்றோர் பலர் வாழ்ந்தனர்; மழைவளத்திற்குக் குறைவில்லை. நில வளத்தாலும், மலை வளத்தாலும் காலமறிந்து தொழில் செய்யப்படுவதாலும், புன்செய் பயிர்களும் அங்கு மிகுதியாக கிடைத்தன. மலையின் கண் ஏராளமான சுனைகள் உள்ளன. பாரி சிறந்த முறையுடனும், பெருங்கொடையாளனையும் வீரத்துடன் வாழ்ந்து வந்தான். பற்றிப் படருவதற்கு ஏற்ற கொழுகொம்பு இன்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தான் ஊர்ந்து வந்த தேரினை நிறுத்திச் சென்ற அருளாளன் நிழலில் நீளிடைத் தனி மரம்போல யாவருக்கும் பயன்படுபவன்;மூவேந்தர்களைக் காட்டிலும் சிறந்த கொடையாளன். தோற்றோடுபவர் கடிலொடுயினைக் கேட்டு, பின் தொடராது நின்று, போரினை நிறுத்தி, பார்த்து மகிழும் வீரன்!

"உலகை வளப்படுத்தி மக்களைக் காக்கும் மழையையும் மறந்து, பாரி ஒருவனையே புலவர் அனைவரும் பாராட்டுகின்றனர்" என்று வியந்து கூறியுள்ளார் கபிலர் என்னும் புலவர் பெருமான். மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் அவர்கள் பாரியைப் பெருமைபடுத்திப் பாடினர்.

இவ்வண்ணம் பலராலும் பாராட்டுப் பெற்று, பெருமையுற்ற பாரியின் மகளிரும் அவனைப்போலவே ஈகை குணம் படைத்தவர்கள். "தந்தையறிவு, மகளறிவு" என்பதன்றோ பழமொழி! இப்பாரி மகளிருள் ஒருத்தியை . பாணனொருவன் தேடி வந்தான். அவன் வறுமையால் பெரிதும் வாடியிருந்தான். உணவு கண்டு பல நாட்களாகிவிட்ட அவனைக்கண்டு மனமுருகி பாரிமகள் தன்னிடமிருந்த பொன்னினை உலையில் வைத்துச் சோறுக்கித் தந்தாள். இச்செய்தி பழமொழி நானூற்றில் உள்ள ஒரு பாட்டால் புலனாகின்றது.

அப்பாடலினால், மழையின்றி, பஞ்சத்தால் வாடியிருந்த ஓர் நாட்டின் கண்ணிருந்து வந்தவன் அப்பாணன் என்பதையும், உணவின்றி துன்புற்ற அவனுக்கு பொன் சோறு தந்து பாரி மகள் உதவினாள் என்ற வரலாற்றையும் நாம் அறியலாம். ஆனால் பசித்தவனுக்குப் பொன் சோறாகுமா? என நாம் ஐயுறலாம். ஆனால் பொன் என்று இங்கு புலவர் குறிப்பிட்டுள்ளது பசித்தவனுக்குப் பொன்னினும் மேலான, பொன்நிறங்கொண்ட தினையையே உணர்த்துவதாகும். தினையும், தேனும் மலைநாட்டிற்குச் சிறப்பான உணவுப் பொருள்.

'கொடை மடம் படுதல்' என்று தமிழ் இலக்கியத்தில் ஒரு சொற்றொடர் உண்டு. இது தலைசிறந்த வள்ளல்களுக்கு இலக்கணமாக அமைவதாகும். கொடை மடம் படுதலாவது பிறர் துன்பத்தைக் காண நேரின் அவருடைய துன்பத்தைத் தானும் உணர்ந்து, அத்துயர் உணர்ச்சியில் பங்கு கொண்டு, தன்னால் இயன்ற உதவியை எல்லாம்—தன்பால் உள்ள பொருளை எல்லாம்-அவருக்கு ஈதல் என்பதாம். இவ்வாறு ஈதலில், துன்புற்றோர்க்கு வேண்டிய அளவே தருவது என்பது இயலாது. இவ்வுண்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள் பண்டைத் தமிழகத்தில் பறம்பு மலை நாட்டு மன்னன் பாரியும், அன்னவன் மகளிர் இருவரும் என்றால் மிகையாகாது.

இவ்வாறு பல வகையாலும் சிறப்புற்று விளங்கிய பாரியிடம் சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தரும் பகைமைக் கொண்டு அவனைஒழித்துவிட்டு, அவன் நாட்டைக் கைப்பற்ற எண்ணி போர் தொடுத்தனர். மற்றும் அம்மன்னர்கள் பாரி மகளிரை மணக்க விரும்பிப் போர் தொடுத்தனர் என்றும் கூறப்படுகின்றது. அதனால் பின்னர் அவர்கள் பாரி மகளிரை மணக்காது விடுத்தனர். புலவர்கள் யாவரும் ஒருமுகமாகப் பாரியின் கொடைச் சிறப்பை புகழ்வது பற்றி பொருமைக் கொண்டு அவனை ஒழிக்க முற்பட்டனர். அவ்வாறே செயதும் முடித்தனர். தந்தை மறைந்தபின் அதன் வருத்தத்தினால் அப்பாரி மகளிர் பாடிய பாடலொன்றில் 'வென்றெளி முரசின் வேந்தர்' என்ற வாக்கியம் காணப்படுகின்றது. அவ்வாக்கியத்திற்கு, புறநானூற்று உரையாசிரியர் ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்து வஞ்சித்துக் கொன்றதின் இகழ்ச்சிக் குறிப்பு உள்ளது என்று கூறியுள்ளார். எனவே மூவேந்தரும் வஞ்ச செயலினால் பாரியை முடித்தனர் என்பது தெளிவாகிறது.

மூவேந்தரும் சேர்ந்துவஞ்சனையால் பாரியைக் கொன்றனர். தந்தையாரை இழந்த மகளிர் இருவரும் மிக வருந்தினர். அவ்வருத்த மிகுதியினால் எழுந்த அன்னாரின் பாடல் படிப்பவரின் மனதை உருக்கும் தன்மையதாகும்.

"அற்றைத் திங்கள்
அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்
எம் குன்றும் பிறர் கொளார்
இன்றைத் திங்கள்
இவ்வெண்ணிலவின்
வென்றெறி முரசின்
வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம்
எந்தையுமிலமே"

என்று பாரி மகளிர் இறங்கி கூறும் பாட்டு அவர்கள் இருந்த கையறு நிலையினைத் தெள்ளிதின் உணர்த்துகிறது அன்றோ? மூவேந்தரைப் புகழ்வார்போல் இகழ்ந்து பேசுகின்றனர். இம்மகளிர் இப்பாடல்தனைக் கேட்டிருப்பின் அம்மூவேந்தரும் வெட்கித் தலை குனிந்திருப்பார். ஏனெனில் முடியுடை மூவேந்தரும் ஒன்று கூடி சதி செய்து பாரி வேளினைக் கொன்றமை வீரத்திற்கு ஒவ்வாதது–பழிக்குரியது என்று இம்மகளிர் தம்பாட்டில் குறிப்பாக உணர்த்தியுள்ளனர். இத்துணை திறம்படப் பாட வேண்டுமாயின் அம்மகளிர் தம் அறிவாற்றல் எத்தகையதாயிருக்கும்?

இப்பாடல் பாரி இறந்து ஒரு மாத காலத்திற்குப்பின் பாடப்பட்டதாகத் தெரிகின்றது. அதுவும் நல்ல முழு நிலா நாளில், தண்ணொளி எங்கும் பரவியுள்ள நேரத்தில், தந்தையை இழந்த இரு மங்கையர் தாமடைந்த துயரை எண்ணிப் பாடுகின்றனர்; உலகில் கண் அனைவரும் இன்புற்றிருக்கும் வேளையில் தந்தையும், செல்வமும் இன்றி, துணையில்லாது தவிக்கும் இளம் பெண்களுடைய ஆற்றொணாத் துயரம் அவர்களின் பாடலிலும் ஒலிக்கின்றதே!

—எஸ். பி. சற்குணம்.

ஜூபிடரின்
அண்ணபத்தி
JUPITER PERFUMERS
CITY
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்.

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

உலகம், இரண்டை ஒன்ருக்கு வழிலேயே வாழ்க்கையின் முழுத் தத்துவத்தையும் அடக்கி வைக்கிறது. கோலநிலாவையும் கொஞ்ச வரையும் மேகத்தையும் பார்த்தேன். கொத்து மலரையும் குடைந்து தேன் குடிக்கும் வண்டையும் பார்த்தேன். கொடியையும் அது கொம்பைச் சுற்றியிருக்கும் நேர்த்தியையும் பார்த்தேன். இப்படி இயற்கையே உலகத்தை இணைத்து வைத்திருக்கும்போது நான் மாத்திரம் எவ்வளவு காலம் தனித்தே செல்லமுடியும்!

என்னுடைய வெறிபிடித்த வைராக்கிய எண்ணங்களைவெடிக்க வைக்கத்தான் போலும் கமலா என் வாழ்க்கைப் பாதையிலே இடைப்பட்டாள். என்னையும் அன்னத்தையும் வெட்டிப் பிரித்தது சாதி, அன்றைக்கு நான் தைரியமற்றவனுகிக் கிடந்தேன். இன்றைக்குச் சாதியைக் கத்தியாகச் சொன்னுல் எனது உள்ளத்தை உறுதியான இரும்பு உறையென்றே சொல்ல வேண்டும்-அந்த அளவுக்குத் துணிவோடு கைகோர்த்துத் திரிந்தேன்.

கமலா, என் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள நகர சபை ஆரம்பப்பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தாள். பத்திரிகைப் பணியொன்றையே கவனித்து வந்த என்னிடம் கமலாவின் எண்ணத்துக்கு விதையிட்டவன் என் தம்பி ராசா. சிறுவர்கள்மட்டும் இல்லாதிருந்தால் எத்தனையோ காதல் கதைகள் உலக அரங்கிலே உலவாமலே மறைந்திருக்கும்! கமலாவுக்குக் கதைப் புத்தகங்கள் கொண்டு கொடுத்தான் ராசா. அதிலிருந்து ஆரம்பித்த பழக்கத்தைக் காலம் வளர்த்தது.

"அழகர்-கமலா" இரு பெயர்களையும் திருமண அழைப்பிதழிலே நான் அச்சேற்றப்போகும்போது எந்த சக்தியால் என்னைத் தடுத்துவிடமுடியும். சாதி விட்டுச் சாதி கல்யாணமென்ருல் அதைக் கனவாக்கிவிடக் கருதும் சமூகத்தால் என்னுடைய துணிவை அசைக்கத்தான் முடியுமா! கமலாவை எப்படியும் மனைவியாக்கி என் இலட்சியத்தை நிறைவேற்றிவிடத் துடித்தேன்.

நான் கொடுத்துஅனுப்பும்கதைப் புத்தகங்களிலே என் பெயரை அவள் கரம் பொறித்திருப்பதைப் பார்த்தேன்-என்னுடைய அன்ருட நடவடிக்கைகளையெல்லாம் பற்றிக் கமலா விசாரிப்பதாகத் தம்பி கூறியதைக் கேட்டேன்-பள்ளி முடிந்து அவள் செல்லும்போதெல்லாம் அந்தச் சுழலும் விழிகள் என் பக்கம் திரும்பி மேய்ந்ததையும் கண்டேன்-கல்லிலே செதுக்கிய எழுத்தாகக் கருத்திலே பதித்துக்கொண்டேன் கமலாவின் உருவத்தை.

கோடை விடுமுறைக்குக் கமலா ஊருக்குச் செல்லப் போகிருளாம்-இந்தச் செய்தியைத் தம்பி ஒரு நாள் ஓடி வந்து சொன்னுன். கமலாவிடம் சென்று அவளின் ஊர் விலாசத்தை வாங்கி வருமாறு தம்பியை அனுப்பினேன்.

உருண்டையான எழுத்துக்களிலே உள்ளத்துக் கொந்தளிப்புகளைச் சுருட்டி வைத்திருந்த விலாசத் தாளைக் கண்களிலே ஒத்திக்கொண்டேன். அதைக் கருத்திலே அழுத்துவதற்காக வாசிக்கத் தொடங்கியபோது...!

சிறு உளியால் பெரியபாறையைக் கூடப் பிளந்துவிடமுடியுமல்லவா, அதைப்போலவே அந்தச் சிறு காகிதம் இறுகிக் கிடந்த என் இதயத்தைப் பிளந்துவிட்டது. ஆசை நினைவுகளால் பின்னப்பட்ட மனித இனம் அந்த ஆசை தகர்ந்துவிடும் போது எவ்வளவு தூரம் பாதிக்கப் பட்டுவிடுகிறது.

முல்லை வாழ்வுபற்றிய நினைவுகளை வளர்த்து வைத்திருந்த கற்பனையை முறித்தெறிந்த முகவரித் தாள். அதிலே, "எஸ். கமலா, சுப்ரமணிய நாயுடு-பூங்குளம் - தஞ்சை மாவட்டம்," எனக் கண்டிருந்தது.

நான் கமலாவைத் திருமணம் புரிந்தால் என் நெஞ்சிலே குமுறிக் கொண்டிருக்கும் இலட்சியத்தின் கதி என்ன ஆவது! சமூகம் மக்கள் கூட்டத்தைச் சாதியின் ரூபத்திலே பிரித்து வைத்திருக்கிறதே, என்னையும் கமலாவையும் ஏன் ஒரே சாதியென்ற போர்வைக்குள்ளே அமுக்கி வைத்து விட்டது! கமலாவும் நானும் ஒரே சாதியாம், நாங்களிருவரும் மணமக்களாக வேண்டுமானுல் மனத்திலே நிரம்பியிருக்கும் கொள்கையையல்லவா மடிய வைக்க வேண்டியிருக்கும்!

நெஞ்சை ஊஞ்சலாக்கி அதிலே கொஞ்சி ஆடிய கமலாவை விரட்டியடிப்பதா? அதன் பிறகு நிம்மதி கலந்த வாழ்க்கையை நடத்திவிட என்னுல்.இயலுமா! ஒரு பார்வையிலே ஓராயிரம் காதல் கவிதைகள் கொட்டிய கமலாவின் உள்ளத்தை ஒடித்து எறிவதா - நெருப்புப் பற்ற வைத்த அடுப்பாகச் சூடு கக்கிக் கொண்டிருந்தது என் நெஞ்சு!

சந்தனக்கிண்ணமாயிருக்க வேண்டிய சமூகத்தை இரத்தத்துளிகளால் நிரப்பி வைத்துக் கோரம் புரியும் சாதி-பூக்கொத்தைப் புழுக்கூட்டத்தூடே தூக்கிப் போடுவதுபோல மிருதுவான மனங்களை மிலேச்சத்தனத்தால் பிரித்து அழுக வைக்கும் சாதி - மக்கள் குழுவினிடையே நிரந்தரமான புகைச்சலை, புரட்டுகளை ஏற்படுத்திக் கொடுமைகளைக் கொட்டிக்குவிக்க நினைத்த சாதியைச் சாய்க்க வேண்டுமென நினைத்த நான் தனியொருவனின் நன்மைக்காகக், கொண்ட கொள்கையை விட்டுவிடுவதா.....இது போன்ற சோதனைகளையெல்லாம் கடந்து தானே இலட்சியத்தின் இறுதி எல்லையை அடையமுடியும்! சாதியை ஒழிக்க வேண்டுமென்று வரிந்துகட்டிப் புறப்பட்ட நானே அதன் சதி நகங்களுக்கிடையே சிக்கிச் சிதைவதா!

சில தினங்களுக்கு முன்பு தோழமைக் கழகத்தின் செயற்குழுவிலே கலப்புத்திருமணம் பற்றிய தீர்மானத்தைக் கொண்டுபோய் நான் பேசிய பேச்சு மறுபடியும் நினைவுக்கு வந்தது."சாதியின் பயங்கரம் மக்கள் பரம்பரைக்கு நீடித்த பிளவை ஏற்படுத்துவதை மாற்றியமைக்க நாம் செயல் திட்டங்களை வகுக்க வேண்டும். அரசியல், பொருளாதாரம், சமுதாயம் என்ற மூன்று பெரும் பகுதிகளுக்கூடேயும் புகுந்து பிரிவை உண்டாக்கும் சாதியை வேரோடு தகர்க்கவேண்டுமேயானுல் துப்பாக்கி முனையிலே கலப்புததிருமணத்துக்கு அரசாங்கம் கட்டாயச் சட்டமியற்ற வேண்டும். நம் தோழமைக் கழகத்தைப் பொருத்த மட்டிலும், இனிமேல் திருமணம் செய்யப்போகும் உறுப்பினர்கள் கண்டிப்பாகக் கலப்புத் திருமணம் புரியவேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பும் தோழமை கழகத்தால் தரப்பட வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமானதுமாகும்" — இப்படித் தீர்மானம் கொண்டுபோய் அதை நிறைவேற்றியவன் நானே!

நான் உருவாக்கிய நல்ல சித்திரம் என்னுலேயே அழிக்கப் படுவதா! கமலா மட்டும் வேறு சாதியைச் சேர்ந்தவளாக இருந்திருந்தால் அவளைத் திருமணம் செய்து என் கொள்கையை உறுதிப்படுத்திவிடுவேனே! எனது உள்ளத்து நரம்புகள் அத்தனையிலும் இலட்சியக் குரல் கிளப்பும் சாதி ஒழிப்புக்காக என் வாழ்க்கையையே பாழாக்கிக்கொள்ளத்தான் வேண்டுமா!

புயலில் சிக்கிய அலைகடலாகிப் பொறுமிக்கொண்டிருந்த என் நினைவுகளுக்கு எப்போதுதான் முடிவேற்படுமோ! மனித எண்ணங்கள் எதற்காகவோ எதிர்பாராத சம்பவங்களிலே மோதித் தெறித்து உடைபட்டு நாசமாய்ப் போய்விடுகின்றன...காதலர்கள் வைக்கும் குறிகளைத் தப்பவிடச் சமூகம் எத்தனையெத்தனை சாக்கடைச் சட்ட திட்டங்களை வீசி வாட்டிவிடுகிறது!

இதயத்தில் உதயம் கிளப்பும் இலட்சியத்துக்குச் செயல் உருவம் கொடுக்க வேண்டுமேயானுல் கமலாவின் நினைவுகளுக்கு மூடி போட்டே தீர வேண்டும். கவலை நெறித்ததால் கக்கிய கண்ணீரால் நனைந்துவிட்ட, கமலாவின் விலாச மடங்கிய தாளைக் கிழித்து வீசியெறிந்தேன். அதே நேரத்தில் உள்ளத்தைக் கிரையம் வாங்கியிருந்த கமலாவை அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றிவிட்டேன்! ★



ஹைதராபாதில் உள்ள சாலர் சங் பொருட்காட்சிச்சாலை இந்தியாவிலேயே சிறப்பான ஒரு பொருட்காட்சிசாலையாகும். அது மூன்ருவது சாலர் சங் நவாப் மீர் யூசப் அலி கான், ஒருவராலேயே சேகரிக்கப்பட்ட கலைப்பொருள்களையே பிரதானமாகக் கொண்டு அமைக்கப்பட்ட பொருட்காட்சி சாலை.

இந்த பொருட்காட்சிசாலை, கிழக்கத்திய பிரிவு, மேற்கத்திய பிரிவு என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கீழ் நாட்டுக் காட்சிப் பொருள்களிடையே, குரான் வேத புத்தகங்கள், தலைசிறந்த கவிஞர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் இலக்கிய நூல்கள், ஆகியவை பிரதானமாய் விளங்குகின்றன. அவை புகழ்பெற்ற சித்திரக்காரர்கள் வரைந்த படங்கள் உள்ளவை. கையெழுத்துக்காரர்கள் அவைகளை எழுதியிருக்கிருர்கள். இக்கையெழுத்துப் பிரதிகளில் சாலர் சங் குடும்பத்தினரிடம் அவை கிடைப்பதற்கு முன்னதாக அவற்றை வைத்திருந்த மன்னர்களின் கையெழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

புராதன காலத்திய பீங்கான் சாமான்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியும் இக்காட்சிச் சாலையில் இருக்கிறது. சீனுவின் ஸூங் வமிசம், மிங் வமிசம் ஆகியவைகளின் (கி. பி. 1000-1500) ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த பொருள்கள் அதில் உள்ளன. காங்கோ வமிசத்தின் ஆட்சிக் காலப் (1500-1700) பொருள்களும் உள்ளன.

18-வது நூற்ருண்டு கால இறுதி அல்லது 19-வது நூற்ருண்டு கால ஆரம்ப வாக்கில் சேம்பர் லேய்ஸ் வொர்செஸ்டர் தொழிற்சாலையில் செய்யப்பட்ட, சித்திர வேலைப்பாடுள்ள பீங்கான் வகைகளும் அதில் இருக்கின்றன.

மேற்கத்திய பிரிவில், 15-வது லூயி மன்னர்கள் காலத்திய மேசை, கட்டில் வகையரு மரச்சாமான்கள், ப்ரெஸ்டன் பீங்கான் வகைகள், வெட்ஜ்வுட் சாமான்கள், கசலர்ஸ், கண்ணுடி சாமான்கள், ஆகிய பொருள்கள் அடங்கியுள்ளன.

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

கள். குருபக்தி மிகுந்த அந்தப் பெண்கள் பஞ்சவர்ணத்திற்குத் தரும் மரியாதையே ஒரு தனிச் சோபிதத்தைத் தந்து கொண்டிருக்கிறது. **“மஞ்சள் துணி எங்கே? வெள்ளித்தண்டை செய்தாச்சா? மணவரையில் இன்னும் மாக்கோலம் போடவில்லையே!”** என்ற பெண்களின் பேச்சுச் சலசலப்பு, இதுதான் திருமண வீட்டுக்கு இலக்கணம் என்று முத்திரை பதித்துக்கொண்டிருக்கின்றது. தாலாட்டுப் பாடியும், தொட்டிலில் போட்டு ஆட்டியும் தூங்காத கைக்குழந்தைகள், உருக்கமுடன் வேலை செய்யும் பெண்களைத் தொல்லைப்படுத்திக்கொண்டிருக்கின்றன. ஆனால் மணமகன் பஞ்சவர்ணம்? அவன் கனவு கண்டுகொண்டிருக்கிறான். அவன் துறவியாகப் போய்விடுவதுபோலவும், அப்போது அவனுடைய காதலை ஒரு சிறந்த காவியமாக எழுதுவதுபோலவும், பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் காவியத்தை தமிழ்ப் பாடகர்கள் எல்லாம் நாடெங்கும் பாடி புகழ் பெறுவதுபோலவும் அப்போது, ஒரு கோடீஸ்வரன் மனைவி, அந்தக் காவியத்தைக் கேட்டு, அதன் ஆசிரியருக்குப் பொன்முடிப்புக் கொடுக்க ஏற்பாடு செய்வதாகவும், நிதியளிப்பு விழாவிற்குச் சென்ற பஞ்சவர்ணம், பணமுடிப்பை வாங்கப் போகும்போது, அவனுடைய காதலியோடு வாழ்ந்த நாட்களை எண்ணிக்களித்து, பின் மேடைக்கு அருகில் போய் நிமிர்ந்து பார்க்கையில், அந்தப் பிரபுவின் மனைவி தன் காதலிதான் என்பதை அறிந்து கதறுவதாகவும், நகரமாந்தர் அவனைப் பைத்தியக்காரன் என்று அடித்துத் துரத்துவதாகவும் பஞ்சவர்ணம் நினைத்து அல்லலுற்றுக் கொண்டிருந்தான். அவன் அழவில்லை. ஆனால் கண்களில் நீர் வடிந்துகொண்டிருந்தது. முகம் அந்தி வானத்தைப்போல் சிவந்திருந்தது.

கொஞ்சநேரத்திற்குப் பிறகு பஞ்சவர்ணத்தின் அறைக்கதவு தட்டப்பட்டது. பஞ்சவர்ணம் கதவைத் திறந்தான். அவனது தாயார் தங்கம்மாள் வியர்த்துப்போய் வந்தார்கள். நெற்றியிலிருந்த குங்குமம் உருகி வடிந்திருந்தது.

“பஞ்சு, என்ன இப்படி இருக்கிறாய்? சாப்பிட்டாயா? நேரம் அதிகமாச்சே, தூங்கக்கூடாதா? நல்ல நாளும் பெரிய நாளுமா தூக்கம் விழிச்சு உடம்பைக் கெடுத்துக்காதே! படுத்துக்க; அதிகாலையிலே எழுப்புகிறேன்.” என்று கனிவாகச் சொன்னார்கள் அன்னை தங்கம்மாள்.

அன்னையின் இனிய மொழிகள் பஞ்சவர்ணத்தின் இதயத்தைத் தொடவில்லை. தன்னுடைய வயதை மறந்து, பருவத்தை மறந்து, நிலையை மறந்து பஞ்சு தேம்பி அழ ஆரம்பித்தான். பக்குவப்பட்ட தாய், பக்கத்தில் இருப்பவர்கள் நகைப்பார்களே என்று பயந்து முதலில் அறைக்கதவைப் படார் என்று சாத்தினாள்.

“பஞ்சு! என்னடா இது! என்ன நடந்தது?”

“அம்மா! நாளைக்குக் கல்யாணம் நடைபெறப் போவதில்லை நான் ஒரு போதும் இந்தத் திருமணத்திற்கு சம்மதிக்கமாட்டேன்.”

“ஏண்டா பஞ்சு, உனக்கென்ன பைத்தியமா? நேத்திக்கெல்லாம் நல்லாத்தானே இருந்தாய்? இன்னிக்கு என்ன வந்திடுச்சு? சுத்தக் கருநாக்குப் பிடித்தவனாயிருக்கியே! நம்ப வீட்டிலே இதுதான் தலைத் திருவிழா! வாயையும் கையையும் சும்மா வச்சுக்கிட்டுப் படுத்துக்க! நேரம் அகாலமாயிடுச்சு! ஓவியம் போல பொண்ணு வருது, உனக்கென்ன?”

“அம்மா! பெண் வீட்டுக்காரர்கள் உங்களை ஏமாற்றி விட்டார்கள். நாளைக்கு வரப்போகிற பெண், அய்யாக்கண்ணு நாயனக்காரர் மகளல்ல! சொந்த மகள் ஓடிப்போய் விட்டாள். அக்கம்பக்கத்திற்குத் தெரியாமல் வேறொரு பெண்ணைப் பிடித்துக்கொண்டு வருகிறார்கள்.”

“ஏண்டா பஞ்சு, உனக்கு மூளை இருக்கா இல்லையா? நீ சொல்றது உலகத்திலே இல்லாத அதிசயமா இருக்குதே! கொள்வினை கொடுப்பினை என்கிறதெல்லாம் பண்டம் மாற்றுகிற காரியமா என்ன? இன்னம் சின்னப்புள்ளையா இருக்கியே அப்பா! எல்லாம் நீ பிறந்த வேளை!

—தங்கம்மாளும், பஞ்சவர்ணமும் இரைந்து பேசிக்கொண்ட சத்தம் கேட்டு நட்டுவனார் உள்ளே வந்தார். பஞ்சவர்ணத்தின் அறைக்கதவைத் தட்டித் திறந்தார். தங்கம்மாள் அழுத கண்ணும் அகப்புண்ணுமாய் நின்றாள். எதிரே பஞ்சவர்ணம் நின்றுகொண்டிருந்தான்.

“ஆத்தாளும் மகனும் என்ன கத்திக்கிட்டே இருக்கீங்க? நடக்க

பிரான்மலை போகும் பெண்வீட்டாரின் வண்டிகள்.

வேண்டிய காரியங்களைக் கவனிக்காமெ இங்கென்ன செய்யிறீங்க!... தங்கம்மா, உன்னைத்தான் கேட்கிறேன்!”-நட்டுவனார் அடக்கமாகக் கேட்டார்.

“உங்கமகன் சொல்றதைக் கேளுங்க. நம்ப ஏமாந்துட்டோமாம்!”-தங்கம்மாள் கண்ணைத் துடைத்துக்கொண்டே சொன்னாள்.

“கல்யாணத்துக்கு சாமான் சட்டி, முட்டி வாங்கினால் கூடக்குறைய வரத்தான் செய்யும். இதையெல்லாம் பாத்துக்கிட்டு இருக்கமுடியுமா? அவனுக்கென்ன தெரியும்! அவன் சின்னப்பிள்ளை. அவனுக்கும் குழந்தைகுட்டி பிறந்தால் எல்லாம் புரியும். இதுக்காக நீ புலம்பிக்கிட்டு இருக்கியே!”

“அய்யோ அய்யோ! சிறுகூடல்பட்டி அய்யாக்கண்ணு நாயனக்காரர் நம்மை ஏமாத்திவிட்டராம்! நாளைக்கி வரப்போற பொண்ணு, அவளுடைய சொந்த மகள் இல்லையாம்! எல்லாம் நம்ப புள்ளையாண்டான் தான் அளக்கிறான்”-என்று சொல்லிக்கொண்டே மீண்டும் அழுதார்கள் தங்கம்மா.

“ஏண்டா பஞ்சு, எவன் இந்தப் புரளியைக் கிளப்பியவன்? மானம் மரியாதையைக் காப்பதில் என்னை மிஞ்சியவன் எவன் இருக்கிறான் இந்த ஊரில்! பெண்ணைப் பார்த்தேன். சித்திரம்போல் இருந்தாள். கண்ணைப் பறிக்கும் காந்தம் போன்ற முகம். கதவிடுக்கில் நான் பார்த்து மகிழ்ந்தேன். நம்புனால் நம்பு; அதற்கப்புறம் நடக்கிறபடி நடக்கட்டும்! எங்க மனதைப் புண்படுத்தாதே! தங்கம்மா! வா வெளியே!” என்று நட்டுவனார் உருக்கமாகப் பேசிவிட்டு வெளியிலே வந்தார். கடைசியாக அவர் பேசும்போது அவர் தொண்டை கம்மியிருந்தது. குரலில் வளைவும் நெளிவும் கூடக்குறைய ஒலித்தன,

பஞ்சவர்ணம் ‘டபார்’ என்று கதவைச் சாத்தினான். சாளரத்தின் வழியாக மலையைப் பார்த்தான். கோயில் விளக்கு இன்னும் எரிந்துகொண்டிருந்தது. பஞ்சவர்ணம் அடிக்கடி மலைக்கோயிலின் விளக்கை ஏன் பார்த்துக்கொண்டிருக்கிறான்?

★

முதற் சாமத்திற்குப் பிறகு சிறுகூடற்பட்டியிலிருந்து பெண் வீட்டார் பத்து வண்டிகளில் புறப்பட்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஆடி அமாவாசையின்போது வண்டிகளைக் கட்டிக்கொண்டு அழகர்கோயிலுக்குப் போய் பழக்கப்பட்ட பெண் வீட்டாருக்கு, பிரான்மலைவரை வண்டியில் போவது கடினமான பயணமாகத் தெரியவில்லை. அழகுமலை ஆண்டவனைப் பற்றி வர்ணித்துப் பாடும் ஆற்றல் பெற்ற வண்டிக்காரர்கள் தொண்டையைப் பதம் செய்து பாட ஆரம்பித்தார்கள். சிறுகூடற்பட்டியிலிருந்து பிரான்மலை பதினைந்துகல் தூரமிருக்கும். **கண்டவராயன்பட்டி, தெக்கூர்,** ஆகிய அழகிய சிற்றூர்களைக் கடந்துதான் பிரான்மலை போய்ச் சேரவேண்டும். பிரான்மலைக்கு வரும் வண்டிப்பாதைகள் அனைத்தும் சதுர்வேதமங்கலத்திற்கு அருகாமையில் ஒன்றுசேர்கின்றன. அந்தச் சந்திப்பிலிருந்து எல்லா வண்டிகளும் ஒரே பாதை வழியாகத்தான் பிரான்மலை ஊருக்குள் போக வேண்டும். வேறு பாதை இல்லை. அந்தப் பாதை மலையடிவாரத்தைச் சுற்றிக்கொண்டு ஊருக்குள் நுழைகிறது. இரவு நேரங்களில் வண்டிகள் அந்த இடத்தில் போகும்போது விளக்கில்லாமல் போகமுடியாது. இடறுகள் அதிகம். சிறு சிறு கற்கள் செங்குத்தாக நிற்கும் பாதை ஓரங்களில் பெரும் பெரும் பாறைகள் உருண்டு கிடக்கும். பெரும்பாலும், வண்டியில் இருப்போரெல்லாம் இறங்கிக்கொண்டுவிடுவார்கள். வண்டிகள் சாயும் பக்கம் ஆடவர்கள் தாங்கிப்பிடித்து தேவைப்படும் பக்கத்திற்கு பலம் கொடுப்பார்கள். இரண்டு கல் தூரத்திற்கு இந்தத் தொல்லைகள் அதிகம்.

கல்யாண வீட்டாரின் வண்டிகள் கிழக்கு வெளுப்பதற்கு மூன்று நாழிகைக்குமுன் அந்த வண்டிப்பாதையின் சந்திப்புக்கு வந்து சேர்ந்தன. எல்லோரும் வண்டியினின்று இறங்கிக்கொண்டார்கள். கண்ணம்மாளும் இறங்கிக்கொண்டாள். வண்டிகள் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தன. கொஞ்ச தூரம் வந்ததும் முன் வண்டிக்காரர் முன் அறிவிப்பு இன்றி வண்டியை நிறுத்தினார். பின்னால் வந்துகொண்டிருந்த ஒன்பது வண்டிகளும் நின்றுவிட்டன. நடந்துவந்த அய்யாக்கண்ணு நாயனகாரர் கல்லையும் முள்ளையும் பாராமல்வண்டிகளைத் தாண்டி முன்வண்டிக்கு விரைந்தார்.

“ஏன் வண்டி நிற்கிறது?”

“மலையடி வாரத்திலே ஏதோ சத்தம் கேக்குது! கொஞ்சம் பொறுத்துப் பாருங்க” என்றான் முன்வண்டிக்காரன்.

அய்யாக்கண்ணு நாயனக்காரர் வண்டிக்காரன் சொன்னதைக் கவனித்தார். மலையுச்சிலிருந்துபெரும் பாறைகள் உருண்டு வருவதுபோல் ‘திடுதிடு’வென்று சத்தம் கேட்டது. அய்யாக்கண்ணு அங்கிருந்தபடியே கூச்சல் போட்டார். பெண்கள் எல்லாம் அலறினார்கள். அதற்குள்ளாக மூன்று பெரும்பாறைகள் உருண்டு வந்து வண்டிகளில் மோதின. வண்டிகள் சாய்ந்தன. மாடுகள் நசுங்குண்டு வீழ்ந்தன. ஒரே அமளிகுமளியாகிவிட்டது! பெண்கள் அலறித் துடித்துக்கொண்டு சிதறி ஓடினார்கள். அப்போது பதினைந்து முரடர்கள் மலையடிவாரத்திலிருந்து பாய்ந்தோடி வந்து நகை நட்டுகளைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். அய்யாக்கண்ணு, “கண்ணம்மா! கண்ணம்மா!” என்று கத்தினார்.

கண்ணம்மா, “அப்பா! அப்பா!!” என்று துடித்தாள்.

குரல் வந்த திக்கை நோக்கினார். மூன்று பேர் பின்தொடர ஒரு மூர்க்கன் கண்ணம்மாவைத் தூக்கிக்கொண்டு ஓடினான்.

“கண்ணம்மா! கண்ணம்மா!! ஐயோ! மகளே! மகளே!”

“அப்பா! அப்பா!! வாங்கப்பா! ஓடிவாங்க!”

—கல்நெஞ்சையும் உருக்கிடும் வண்ணம் தந்தையும் மகளும் கதறினார்கள். வெறிபிடித்த கூட்டம் கண்ணம்மாவைத் தூக்கிக்கொண்டு சதுர்வேத மங்கலத்தை நோக்கி ஓடியது. அய்யாக்கண்ணு ஓடி ஓடிக் களைத்து, உள்ளம் ஒடிந்து தொப்பென்று தரையில் விழுந்தார். அவர் வாயில் நுரைத் தள்ளியது. சில விநாடிகளுக்குப் பிறகு அவர் புது பலம் பெற்று எழுந்து மறுபடியும் பின்தொடர்ந்து ஓட ஆரம்பித்தார். ‘கண்ணம்மா கண்ணம்மா!’ என்று அவர் கூவிக்கொண்டே ஓடினார். வெகுதூரத்தில் ஒரு வண்டி வந்துகொண்டிருந்தது. அந்த வண்டியில் ஒரு விளக்குத் தொங்கிக்கொண்டிருந்தது. சதங்கை கட்டிய அந்த மாட்டுவண்டிகள் ஜல்ஜல் என்று எதிரே வந்துக்கொண்டிருந்தன.

“ஐயா, புண்ணியவானே, மகாப்பிரபு! கொள்ளைக்காரர்கள் என் மகளைத் தூக்கிகொண்டு ஓடுகிறார்கள்! காப்பாற்றுங்கள்!” என்று முழு மூச்சோடு கதறினார் அய்யாக்கண்ணு. அதற்குள் வண்டி அருகில் வந்து விட்டது. அய்யாக்கண்ணு குறுக்கே நின்று வண்டியை மறித்தார். வண்டிக்காரர் இறங்கிவந்தான்.

★ அடுத்த இதழில் முடியும் ★

கள்!

மதுமரங்களான தென்னையும் பனையும் நம் நாட்டுச் செல்வங்களாகும். வானுறவோங்கி வளர்ந்துள்ள அம்மரங்களில் வடிகின்ற மது பண்டு தொட்டு நம் நாட்டாருக்கு பயன்பட்டு வந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். நம் நாட்டு மதுவேயல்லாமல் வெளி நாட்டு உயர்ந்த மது வகைகளும் நம் நாட்டில் விற்பனையாகிக்கொண்டிருந்தன.

கலைஞர்கள்- அரசர்கள் முதலியோர் கள்ளைப் புறக்கணித்ததாகத் தெரியவில்லை.

"குடக்கள் நீ கொண்டு வா
என்றுன் குனிவிற்
றடக்கையாய் வென்றி தரும்"

என்ற புறப்பொருள் வெண்பா மாலைச் செய்யுளால் போருக்குச் செல்லும் வீரன் "கள் கொண்டு வா" என்று சொல்லுவதை (விரிச்சி) நற் சொல்லாகக் கருதுகிறான். "தேள் கடுப்பன்ன நாள் படுதேறல்" என்றும் கள்ளைக் குறிக்கின்றனர். "தேட் கடுப்பன்ன தேறல்" என்று எதனைக் குறிக்கின்றனர்?

செழிப்பாக வளர்ந்த பனைமரத்தில் ஒரு பாளையில் மட் கலசத்தைக் கட்டி வைப்பர். மட் கலசத்தில் துணி ஒன்றில் சுக்குப் பொடி சாதிக்காய்த் தூள்-ஏலம்-கிராம்பு முதலியவற்றைக் கலந்த கலவை முடியப் பெற்றிருக்கும். பாளையில் ஊறுகின்ற கள் மட் கலசத்தில் துளி துளியாகச் சேர்ந்து கலவையைக் கரைத்துப் பெருகி நிற்கும். இக் கலவைக் கள்ளை ஒருவாய் மூங்கிற் குழாய்களில் அடைத்துப் பூமியில் புதைத்து வைப்பர். சில நாட்கள் கழித்து எடுத்துப் பார்த்தால் கள்ளின் வேகத்தால் மூங்கிற் பட்டைகள் வெடித்துக் காணும். அக் குழாயினுள் வைக்கப்பட்ட கள்ளில் ஒரு துளி உதட்டில்பட்டாலும்தேள்கடித்ததை போன்ற உணர்ச்சியை உண்டாக்கும். இக்கள் உடலுக்கு உறுதி பயப்பதோடு ஒருவகை நோயையும் போக்கவல்லது. இத்தகையகள்ளைத் தான் "தேட் கருப்பன்ன நாட் படு தேறல்" எனக் கூறுகின்றன என நினைக்க வேண்டியுளது.

கலைக்கும் கள்ளிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கலை கவலையை மறக்கச் செய்கிறது. கள்ளும் கவலையை மறக்கச் செய்கிறது. உழைத்து அலுத்துப் போனவனின் நாடி நரம்புகளை முறுக்கேறச் செய்வது கள்! ஓய்ந்து போன உள்ளத்திற்கு உற்சாகம் கொடுப்பது கலை. ஆகவே கள்ளும் இன்றியமையாப் பொருள்களுள் ஒன்றே!

"இம்மையும் மறுமையும்
இறுதியிலின்பமும்
தன்வயிற் றருஉ
மென்றுதலை மகனுரைத்தது
கொலையுமுண்டோ! கொழு
மடற் றெங்கின்
விளை பூந்தேறலின்
மெய்த் தவத்தீரே!"
—(மணிமேகலை)

கள் தரும் பயன் என்ன என்று தலை மகன் கூறியதாகக் களி மகன் கூறுகிறான்.

கையிற் கம்பன் கவிதையும் கலசம் நிறைய மதுவும் இருந்தால் வேறென்ன வேண்டும் என்றொரு புலவர் மதுவைப் போற்றிப் புகழ்கிறார்.

"பச்சை முந்திரித்
தேம்பழங் கொன்றே
பாட்டுப் பாடி நற்சாறு பிழிந்தே
இச்சை தீர
மதுவடித்துண்போம்"

என்றும் கள்ளில் இன்பம் கலைகளில் இன்பம் என்றும் பாடி மகிழும் பாரதியார், மதுவடித்துண்ணலைத் தீதென்று சொல்வோரைப் பார்த்துக் கைகொட்டி நகைப்போம் என்று பாடுகிறார்.

முத்தொள்ளாயிரம் என்னும் நூலில் வரும் ஒரு பாடலைக் கவனிப்போம்.

பூம்பொழில் வஞ்சி நகரில் மது பானக் கடைகள் மிகுதியாக உள்ளன. மதுவோ உயர்ந்தவகை தேட் கடுப்பன்ன நாட் படுதேறல்"! மது வருந்தச் செல்வோரும் மதிப்பிற் குரியவர்களே! ஊராள்வோரும் அவர்கட்கு உற்ற துணையாகயிருப்பவர்களும் உல்லாச வாழ்க்கையை நடத்துகின்றவர்களுமே மதுக்கடைகளில் நுழைகின்றனர். கூடி மது வருந்தும் பழக்கந்தான் அந்நாளில் இருந்தது. தனித்து மதுவருந்துவதில் மகிழ்ச்சி இல்லையன்றோ? மதுவுண்ணும்போதும் பிறர் நன்மையையே விரும்புகின்றனர். எதிரெதிரே உட்கார்ந்துகொண்டு மதுவைக் கிண்ணங்களில் பெற்றுக் கொள்கின்றனர். கைகளை நீட்டி மதுக் கிண்ணங்களை ஒன்று சேர்த்துஒருவரையொருவர்பார்த்து புன்னகை கொள்கின்றனர்; "உங்கள் நன்மைக்காக நான் மதுவருந்துகிறேன்" என்று கூறுகின்றனர் போலும். (I drink for your favour) ஒருவர் மதுக்கிண்ணத்தில் மற்றொருவர் கிண்ணம் படும்போது கள் சிந்தத்தானே செய்யும்! அவ்வாறு சிந்துகின்ற கள் துளி துளியாகச் சேர்ந்து, வஞ்சி நகரையே ஈரமாக்கிவிடுகிறது. தெருக்கள் கள்ளினால் நனைந்துவிட்டன. எங்கு பார்த்தாலும் கள் நுரை! கள்ளின் நறுமணம்!! கட்பெருக்கால் நனைக்கப்பட்ட வஞ்சி நகர்ப் பெருந் தெருக்களில் யானைகளின் மீதேறி வருவோரும் போவோரும் கணக்கிலடங்காதவர்களாயுளர். தரையோ கள்ளால் நனைவுற்று மென்மை அடைந்துள்ளது. யானைகளின்வலிய பெரிய கால்கள் அத்தரையில் படுவதால் பூமி சேருகிறது. இனி கவியின் சொல்லோவியத்தைக் காண்போம். கவி மிகைபடக் கூறியிருக்கலாம். ஆனால் கருத்தைக் கவர்கிறது. செய்யுள் களிப்பை உண்டு பண்ணுகிறது. பாடல்

"களிகள் களிகட்கு
நீட்டத்தங் கையாற்
களிகள் விதிர்த்திட்ட
வெங்கள்-துளிகலந்து
ஓங்கெழில் யானை
மிதிப்பச் சேருகுமே
பூம்பொழில் வஞ்சி யகம்"
—(முத்தொள்ளயிரம்)

வஞ்சி நகர் மதுபானக் கடைகளுக்கு யானை மீதேறிக்கூட வருகின்றனர் என்று அறிய முடிகிறதல்லவா? அத்தகையோர் சாதாரணமானவர்களாக இருக்கமாட்டார்களே! உயர்ந்த நிலையிலுள்ளோர் "உலா" வருவதுபோல யானை மீதேறிக் கட் குடிக்கச் செல்லின், கள்ளும் உயர்ந்ததாகத்தானே இருக்க வேண்டும். அதுதான் நாம் மேலே குறித்த நாட் படு தேறல் போலும்!

—வித்துவான்-சி. சங்கரலிங்கம்.

கதவைத் தட்டிய கள்ளக் காதலன்!

காட்சிக்கு

மாவீரன் ஒருவன், ஒரு வஞ்சிக் கொடியின் கடைவிழிக் கள்ளின் சுவையிலே மயங்கி வீழ்ந்தான். விழி அன்னைக் குலம் ஈன்றெடுத்த அன்புக் குழந்தை இருவரது உள்ளங்களிலும் வளர்ந்து கொண்டிருந்தது. ஆம், இரு உள்ளங்கள்-அங்கே தழைத்து வளர்வது ஒரே மகவு! அதுதான் விந்தை. ஆனால் இது காதலரிடைக் கண்கூடு. மற்றவருக்குத் தெரியாமல் மறைவிலே சந்தித்து வந்தார்கள். அவர்கள் தம் சந்திப்பு உரையாடலெல்லாம் தேன்கலந்தத் தாலாட்டாய்க் குழந்தையைக் கண்வளர வைக்கும்.

பருவத்திலே பூத்து நிற்கும் பூவை, இப்படி 'திருட்டுக்' காதலில் எத்தனை நாள்தான் நிம்மதியாக இருக்கமுடியும்? தோழிகளின் நகையாடலோ பெருகிக் கொண்டு வருகின்றது! ஊரிலுள்ளவர்களும் ஏதேதோ 'அலர்' தூற்றுகின்றார்கள். இந்த இக்கட்டானசூழ்நிலையில் அவனை மணந்து வாழ்வு நடத்த வேண்டும் என்ற தனது எண்ணத்தை அறிவுடைமையாகநிறைவேற்றப் பார்க்கின்றாள் அந்தத் தலைவி. அதற்கொரு சூழ்ச்சியைக் கையாளுகின்றாள்.

சில நாட்களாகவே இரவுப் பொழுதிலே அவனும் அவளும் சந்திப்பது வழக்கம். அது போன்றே அன்றொரு நாள் இரவிலே அவன் அவளது இல்லத்திற்கு வந்து கதவைத் தட்டுகின்றான். ஆனால் வழக்கத்திற்கு மாறாக, அவளோ அவளது தோழியோ யாருமே வந்து கதவைத் திறக்கவும் இல்லை; குரல் கொடுக்கவுமில்லை. அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாகிவிட்டது. எனவே வருத்தத்துடன் இல்லம் மீண்டுவிடுகிறான். அப்போது அவள் சொல்லுகின்றாள்:

"பெருமானே, பலரும் துயில்கின்ற நள்ளிரவிலே, வலிய களிறுபோல வந்து, தாழிடப்பட்ட கதவைத் தாங்கள் திறக்க முயன்ற ஓசையை நாங்கள் கேட்காமல் இல்லை; கேட்கத்தான் செய்தோம். ஆனாலும் என் செய்வோம்? உச்சிச் சூடு சிதையவும், தோகை மெலியவும் நன்றாக வலையில் அகப்பட்ட மயிலைப் போல நாங்கள் வருந்தி அசையும்போதெல்லாம், அறப்பண்பே இல்லாத எம் அன்னையர் எங்களைத் தழுவிக்கொள்வாளே! நாங்கள் என் செய்வோம்?" என்று சொல்வதின் மூலம், உடனடியாகத் திருமணத்திற்கு ஆவன [illegible]ய்ய வேண்டும் என்றும், [illegible]த்தகைய 'இடையூறுகளுள்[illegible] சந்திப்புக்கள்' இனி கூடா[illegible]தன்றும் தோழி தலைவனுக்[illegible] அறிவுறுத்துவது கடமை[illegible]ப நினைவூட்டுகின்றது.

காட்டுவது

இதுவரை கண்ட காட்சியை இன்றும் கண்ணுக்கு விருந்தாக்கிக் காட்டுவது **'குறுந்தொகை'**ப் பாடல் ஒன்றுதான்: பாடிய அறிஞர் பெயர் **'கண்ணனார்'** என்பதாகும்.

"பல்லோர் துஞ்சு
நள்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வத்
திரவுக்கதவ முயறல்
கேளே மல்லேங்
கேட்டனம் பெரும
ஓரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்கியாம்
உயங்குதொறு முயங்கும்
அறனில் யாயே"
(பாடலெண். 244)

[உரவு-வலிய; முயறல்-திறக்குமொலி; ஓரி-உச்சிச் சூடு; முருங்கு-சிதை; உயங்கும் -வருந்தி அசையும்; யாய்-தாய்.]

திறனுய்வு

இல்லறந் துவக்கும் இலக்கிய விழாவை விரைவில் முடித்திட தலைவனிடம் தலைவியும் தோழியும் செய்யும் வினை அறிவு கூர்த்ததாயுளது. 'நள்' என்னும் ஓசையுடைத்தாயினமையாலே நடு இரவு, நள்ளிரவு எனப் பெயர் பெற்றதாக இப்பாடல் மூலம் அறிகிறோம். தலைவனைக் குறிக்கும்போது, வீரமே அவனுக்கு அணியாகக் கூறப்பெறல் அழகு. இதை, இப்பாடலிலே காண்கின்றோம், இத்தலைவன் யானைபோன்ற வலியுடையவன் என்பதாக. அவன் கதவு திறக்கச் செய்த ஒலியையும் கேட்கத்தான் செய்தோம் என்று தோழி சொல்வதினின்று, அந்த நள்ளிரவிலும் அச்சிறிய ஒலியைக் கேட்டிடுமளவிற்குத் தலைவி விழித்திருந்தனள் எனத்தெரிகின்றது.

அப்படியும் எழுந்து வந்து திறக்கலாம் என்ற உள்ளம் தானும் தலைவிக்கும் தோழிக்கும். ஆனால் இவர்கள், தலைவன் கதவு தட்டும் ஓசை கேட்டு வருந்தி அசையும்போதெல்லாம் தான், அவர்களது அன்னை அவர்களை அணைத்துக்கொள்கின்றாளாம். எனவே எழுந்து வந்து தலைவனை எதிர்கொள்ள இயலாமைக்குத் தோழி வருந்துகின்றாள். இந்த வருத்தத்தை அவனும் உணரச் செய்வதற்குத் தங்கள் அன்னையை 'அறனில்' அன்னை-கொடிய தாய் என்று தோழி குறிப்பது வேடிக்கையாய் உள்ளது. உண்மையிலே தோழிக்கோ அன்றி தலைவிக்கோ வருத்தமா இது? அவர்களது சூழ்ச்சியின் வெற்றிக்கு முதற்படியல்லவா இது? இந்த பேச்சைக் கேட்டதும், அத்தலைவன் இனி எங்கே இதுபோன்று 'கள்ளத்'தனமாகச் சந்திக்கவரப் போகின்றான்? மண விழாவிற்கல்லவா முயற்சி செய்யப் போகின்றான்? அறிவு சால்பமைந்த சூழ்ச்சித் திறனில் நயம் மண்டிக் கிடக்கும் பாடல் இது.

—தேசிணி, பி. காம். (ஆனர்சு).

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
198388
சென்னை-600 008

வெண்பாப் போட்டி

18. வீரனையே தேடி விரும்பு.

தன்னாடும்; தன்மொழியும்; தன்னினமும்; மாண்புடனே;
எந்நாளும் காணுதற்கே எண்ணுபவன்—நண்ணுவனோ ?
வீரனென வாழாமல் வீற்றிருக்க; வேல்விழியே!
வீரனையே தேடி விரும்பு.

—முத்தூரான், பொள்ளாச்சி.

தன்மானம் காக்க தமிழ்காக்க மூவேந்தர்
பொன்னாடு காக்கப் புகுவாயேல்—எந்நாளும்
பேரம் பலபேசும் பித்தர் தமையொழித்து
வீரனையே தேடி விரும்பு.

—பெ. இராமையா, சாலிச்சந்தை.

பாராண்ட பைந்தமிழைப் பாய்ந்தழிக்க வந்துவிட்ட
சீரில்லா இந்திமொழித் தீமையைக்—கார்குழலே
வாராது காத்திட வாள்தூக்கும் வண்மைசேர்
வீரனையே தேடி விரும்பு.

—ஆ. க. வேலவன், இரங்கசமுத்திரம்.

சிந்தை சொலும்நெறியில் செல்லாத நீர்மையனாய்,
செந்தமிழ் காக்கும் திறலோனாய்,—எந்தவித
நேரத்தும் அன்பறத்தை நீங்கானாய் வாழவல்
வீரனையே தேடி விரும்பு.

—சி. சிவராமலிங்கம், சென்னை.

எத்தனையோ பேருன்னை எய்த முயன்றாலும்
அத்தனை பேரையும்நீ ஆராய்ந்து—முத்தமிழைத்,
தீரத் திராவிடத்தை மீட்கத் திறனுள்ள
வீரனையே தேடி விரும்பு.

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

ஏரை உழும்மன்னர் என்மேல் ஒருவிழியால்
நேரம்பு விட்டார் நிலனோக்கிக்—கூர்விழியால்
ஓரம்பை வீசி உளங்கொண்டேன் நெஞ்சே! அவ்
வீரனையே தேடி விரும்பு.

—குளிரெழிலன், சாலைப்புதூர்.

சாந்தம் குடிகொண்ட சற்குணர் போல்பேசி
காந்தம்போல் உன்னைக் கவருவர்—திந்தேனே
சீரான உன்வாழ்வைச் செம்மையாய் நீ நடத்த
வீரனையே தேடி விரும்பு.

—வே. கருப்பையா, மதகுபட்டி.

அன்பு முகங்காட்டி ஆடவரை சொக்கவைத்தே
இன்ப உணர்வலையில் ஈர்த்திடும்—கன்னியே!
வீரமுடன் நாட்டை விடுவிக்க வாள்வீச்சு
வீரனையே தேடி விரும்பு.

—பழமைபோக்கி, கண்ணமங்கலம்.

ஏழையே யானாலும் எத்தகைய இன்னலினும்
கோழையாய் மாறாத கோமகனாய்ச்—சேயிழையே
நாளும்நின் நல்வாழ்வில் நாட்டமே கொள்கின்ற
வீரனையே தேடி விரும்பு.

—மு. கருப்பையா, ஆதனூர்.

போற்ற வினைவிரும்பிப் பொய்கூறும் புல்லருக்கு
ஆற்ற லிருந்துதா னென்னபயன் ?—நற்றமிழே !
சோரமின்றி உண்மைக்கே என்றென்றும் போராடும்
வீரனையே தேடி விரும்பு.

—எழிலன், நெய்...

முத்தமிழ் நாடுபுகழ் மூதறிஞர் தம்சொல்லை
பித்த மெனமொழிந்தோர் பீதிபெற—வைத்தபெருந்
தீரனிவன் என்றருந் தென்னாடு போற்றுகின்ற
வீரனையே தேடி விரும்பு.

—செ. ப. விசுவநாதன், சென்னிமலைபாளையம்.

பாவலரும் நாவலரும் போற்றும் தமிழ்மொழியைக்
காவாத வாழ்வு கடைவாழ்வே—மேவுமலை
நீர்போல் விரைந்து நிருதரிடைப் போராடும்
வீரனையே தேடி விரும்பு.

—ந. அலி, துறையூர்.

கைம்மைத் துயர்மூழ்கிக் கண்சோரும் என்தோழீ
பொய்மை மதக்கொள்கை போக்கிநீ—உய்வடைய
வீரமுடன் உன்மணத்தை வேண்டும் மறுமலர்ச்சி
வீரனையே தேடி விரும்பு.

—கேசரிக்கண்ணன், கோவை.

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கை
தன்னகத்தே கொண்டு தமிழ்த்தாய்க்கு—இன்னலெனின்
காரெனப் பாய்ந்து களைந்து மொழிகாக்கும்
வீரனையே தேடி விரும்பு.

—ஆ. பன்னீர்செல்வம், ஆங்கரை.

குடிகெடுக்கும் எண்ணம் குணமற்ற உள்ளம்
குடிகொண்டோர் ஆளல் கொடுமை—குடிமகனே
தீரனையே! தன்னலத்தைத் தீய்த்த தகைசான்ற
வீரனையே தேடி விரும்பு.

—இறைவன், புதுவை.

அன்புள்ள தங்கையே ஆர்தடுத்த போதிலும்நீ
உன்னுள்ள வீட்டிற் குகந்தவராம்;—தென்னகத்தின்
சீருயரப் பாடுபடும் செந்தமிழை வாழ்விக்கும்
வீரனையே தேடி விரும்பு.

கி. ஆ. குப்புராசு, பேரூர்.

வாட்டமுற வண்டமிழ்த்தாய் வாழ்வதனைக் கொய்யவந்த
கோட்டான், முகவடவர் கூறுமிந்தி—நாட்டினிலே
வேரறவே நீக்கிநம் வண்டமிழ்க்குச் சேவைசெய்
வீரனையே தேடி விரும்பு.

—அ. மஞ்சினி, திண்டிவனம்.

அன்பு அகம்நிறைத்து ஆசை விழிசுரக்க
கன்னல் மொழிபேசி, காரிகையே!—பண்பொழுக
ஆரம் அணிவித்தே ஆனந்த வாழ்வளிக்கும்
வீரனையே தேடி விரும்பு.

—அருண்மொழி, இராயகிரி.

இந்திப் பொதுமகளின் இன்ப நலம்வேண்டி
புந்தி திரிந்துழலும் புல்லியரை—செந்தமிழ்
ஆரணங்கே பாராதே; இன்பத் திராவிடத்தின்
வீரனையே தேடி விரும்பு.

—ந. இராமசாமி, சித்தையன்கோட்டை.

பாஞ்சாலி சேலை பறிகொடுத்தார் பாண்டவர்கள்
பூஞ்சோலை மான்கருதி பெண்ணிழந்தான்—வஞ்சியே
பாரினிலே அன்னாரைப் பாராமல் பண்புநிறை
வீரனையே தேடி விரும்பு.

இல. அரவரசன், முகவை.

சாதிமத சாத்திரங்கள் சாகச் சுதந்திர
ஆதித் தமிழகம் காணவே—நீதியொடு
வீரம் விதைத்துக் குருதியுயிர் பாய்ச்சும்மா
வீரனையே தேடி விரும்பு.

—வ. தமிழரசு, சென்னை-21.

ஜூன் 10
எங்கும் கிடைக்கும்
முல்லை
விலை அணா எட்டு.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: R. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு